861

தொழில்

INDUSTRY FORTNIGHTL

மாதம் இருமுறை

1-12-58

ஆசிரியர்: K. பெருமாள் உடையார்

விலை
25 நயாபைச

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 DEC 1958
MADRAS

உதட்டிலே உறவும், உள்ளத்திலே கள்ளமும் கொள்ளாதிருக்க இன்றே கதரை வாங்குங்கள் !

வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை, கதருக்கு இல்லை சுபடச் சிந்தை!

உழைப்பின் மதிப்பு விலையில் இல்லை, ஏழைகளின் உயர்வு பதவியில் இல்லை!

உங்கள் மனதுக்கு ரம்மியமான பட்டுமுதல் பருத்தி ஆடைகள் வரை கிடைக்கும்

உங்கள் அளவுக்குத் தகுதியான தைத்த உடைகள் தயாராக இருக்கின்றன

ரூபாய்க்கு அணு 0—3—6 கமிஷன் கெ [illegible] ப்

கதர்

சத்தியத்தின் சின்னம்! சமத்துவத்தின் அறிகுறி!

இன்றே கதரை அணியுங்கள் ; நன்றே செய்யுங்கள் !

நாடெங்கும் வாழ கேடொன்றும் இல்லை

மந்திரிகள் முதல் மக்கள்வரை பேதமின்றி செய்யும் தொழில் இது ஒன்றே.

★

சென்னை கதர் அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

[கதர், குடிசைத் தொழில் கமிஷனல் அங்கீகரிக்கப்பட்டது]

86, பிராட்வே, சென்னை-1.

விற்பனை கிளை :

ஜெயா மான்ஷன், பெரியமெட்டு, சென்னை-3.

தொழில்

இந்த இதழில்

		பக்கம்
நாம்	...	2
தலையங்கம் :		
கோபி வழி காட்டும்	...	3
ஒளிக் கதிர்	...	5
~~தொழில் வர்த்தக இலாகா சிறு அதிகாரிகள் கைது~~	...	8
தொடர் நாவல் :		
இதுதான் காதல் !	...	9
உண்மைச் சம்பவங்கள்	...	23
சாயத்தொழில்	...	30
அகவிலை கொடுமைக்குக் காரணம் என்ன?	...	21
சிறு கதை :		
தியாக உள்ளம்	...	35
முயற்சியால் முன்னுக்கு வந்தவர்	...	26
பாரதியார் வ. உ. சி. நினைவு விழா	...	29
கலைமணம் (சினிமா விமர்சனம்)	...	30
வளரும் படங்கள்	...	27

கதை, கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே

ஏ.கே.அப்பாதுரை முதலியார் & சன்ஸ்
(காபி & மளிகை வியாபாரம்)
132-136. பைகிராப்ட்ஸ் ரோடு, மதராஸ்-5.
கிளை: 17. தெற்குமாடவீதி, மைலாப்பூர்.

Telegrams: Marigold
Phone: 2438.

K Perumal Udayar

Importer, Exporter & Manufacturers' Representative

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்
55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3.

1.4.4859

நாம்

வணக்கம்,

"தொழில்" வாசகர்களுடன் நாம் அளவளாவி நெடுநாளாகி விட்டது. கடந்த எட்டுத் திங்களில் "தொழில்" மகத்தான வளர்ச்சி கண்டுள்ளது குறித்து வாசகப் பெருமக்களைப் போலவே நாமும் பெரும் மகிழ்வும், பெருமிதமும் கொள்கிறோம். குறிப்பாக. வ. உ. சி. மலர் சிறப்பாக அமைந்ததைப் புகழாதவர்கள் இல்லை! நாளிதழ்களின் ஆசிரியர்களும், அறிஞர்களும், அமைச்சர்களும் தம் பாராட்டுதல்களை நமக்குத் தெரிவித்துள்ளார்கள்; அதற்கு நாம் நன்றி செலுத்துகிறோம். உண்மையில் அனைவரது ஒத்துழைப்பும், உதவியும் தாம் மலரின் சிறப்புக்குக் காரணம். முதல் அமைச்சர் திரு. காமராஜ் உள்பட பல தலைவர்கள், எழுத்தாளர்களின் கட்டுரைகள் காலத்தில் நமக்குக் கிடைக்காததால் சென்ற இதழில் இடம் பெறவில்லை. முதல் அமைச்சரின் கட்டுரை இந்த இதழில் இடம்பெறுகிறதென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மற்றக் கட்டுரைகளைப் பின்னர் வெளியிட முடியுமென நம்புகிறோம். உரிய காலத்தில் மலருக்குக் கட்டுரைகள் தந்து உதவிய நிதி அமைச்சர் திரு சுப்பிரமணியம், ஊராட்சி மன்றத் துறை அமைச்சர் திருமதி லூர்தம்மாள், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு கே. ராஜாராம், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம், தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார், திரு வ. உ. சி. சுப்பிரமணியம் ஆகியோருக்கும் வாழ்த்துச் செய்தி உதவிய மராமத்துத் துறை அமைச்சர் திரு பி. கக்கன், சபாநாயகர் டாக்டர் யு. கிருஷ்ணாராவ் முதலியோருக்கும், மதிப்புரை வழங்கிய பத்திரிகைகளுக்கும் நம் மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

சிறு தொழில்கள் வளர்ச்சிக்குத் "தொழில்" உழைத்து வருவதை வாசக அன்பர்கள் அறிவார்கள். ஒவ்வொரு இதழிலும் பயனுள்ள ஒரு தொழில் முறை வெளிவருவதைப் பலரும் வரவேற்றுள்ளனர்.

முன்பு வாக்களித்தபடி 'கலை மணம்' பகுதியில் சினிமா, நாடகம் முதலிய இன் கலைகள் விரிவாக இடம்பெற்று வருகின்றன. மற்றும் பல புதுப்புது அம்சங்களைப் புகுத்துவதே எங்கள் நோக்கம்; தாள் தட்டுப் பாடு தான் தடையாக இருக்கிறது. எனினும் வாய்ப்புக் கிடைக்கும்போதும் அவை இடம் பெறும்.

மற்றொரு மகிழ்ச்சிக்கு உரிய செய்தி; "தொழில்" இதழ்கள் தமிழ் நாடு மட்டுமின்றி இலங்கை, மலேயா, சிங்கப்பூர் போன்ற தமிழ் வழங்கும் பகுதிகளில் எல்லாம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

வட நாட்டில் புதுடில்லி, பம்பாய் கல்கத்தா முதலிய நகரங்களிலும் தென் நாடு முழுவதிலும் "தொழில்" எங்கும் கிடைக்கும். நமது பிரதிநிதிகள் உள்பட ஹிகின்பாதம், சுதேசமித்திரன் புத்தக விற்பனை நிலையங்களிலும் வாசகர்கள் வாங்கிக் கொள்ளலாம்.

தமிழ்ப்பெரு மக்கள் அளித்து வரும் ஆதரவுக்கும் அன்புக்கும் நாம் என்றும் கடமைப் பட்டுள்ளோம். "தொழில்" இதழின் வளர்ச்சிக்குரிய யோசனைகளையும், கருத்துக்களையும் என்றும் போல மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

வணக்கம்

ஆசிரியர்.

BUY ALWAYS

OUR BEST QUALITY

FINE & DELICIOUS TO DRINK

COFFEE

RAW, ROAST & GROUND

Our Scented Nuts—A Speciality

Sawmy's Coffee Mfg., Co,

262, Netaji Subhas Chandra Bose Road, Madras-1.

Phone No. 3687.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 1—12—58	இதழ் 15

கோபி வழி காட்டும்

அகவிலைக் கொடுமையால் மக்களினம் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் இந்நெருக்கடியான நிலையில் கோபிச் செட்டிப்பாளையத்தில் மாகாண அரசியல் மகாநாடு ஸ்ரீ கே. ராஜாராம் நாயுடு அவர்கள் தலைமையில் கூடுகிறது. உடனடியாய் பரிகாரம் காணும் தீர்மானங்களை நிறைவேற்றி செயல்படுத்த தலைவர்கள் ஆவன செய்வார்களென்றெதிர் பார்க்கிறோம். ஆளும் கட்சியான காங்கிரஸ் மகாநாட்டின் தீர்மானங்களோ, அவற்றின் விளைவாய்க்கிட்டும் நன்மைகளோ காங்கிரஸ் கட்சியினர்க்கு மாத்திரம் சொந்தமாய் விடுவதில்லை. எதிர் மனப்பான்மை கொண்டோரும் இன்னலின்றி அவற்றை அனுபவிக்கவே செய்கின்றனர்.

எனவே, எத்தரத்தினரும் இம்மகாநாட்டின் முடிவுகளை வரவேற்கவேண்டியது அவசியமாகும். மாறுபட்ட மனப்பான்மையினரின் ஆரவாரிப்பை விட ஆளும் கட்சியினரின் நேரடி நடவடிக்கை உடனடியான பலனைத்தரும் என்பதில் ஐயங்கொள்ளத் தேவையில்லை.

இது உலகமே அமைதி யிழந்துள்ள காலம். எந்தநாட்டிலும் ஏதோ ஓர்துறையில் நெருக்கடி ஏற்பட்டேயிருக்கிறது. நம் நாட்டைப் பொறுத்தவரையில் பற்றாக்குறை அகவிலைக் கொடுமை இவற்றால் மக்களினம் பரதவித்துக் கொண்டிருக்கிற தென்பது மிகையல்ல. பெரும்பான்மையினரான ஏழை மக்கள் இன்று அமைதி குலைந்த நிலையிலிருக்கின்றனர். வேறு எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் மனிதரினம் சகித்து ஏற்கும். உடம்பை வளர்த்து-உயிரைப் பேணும் உணவிலே பற்றாக் குறையோ-அகவிலையோ ஏற்படுவது பொறுமையை சோதிப்பதாக முடியும். இன்றைய பற்றாக்குறைக்கும், அகவிலைக் கொடுமைக்கும் ஜன சங்கியைப்பெருக்கமென அரசியல் வட்டாரத்தில் காரணம் கூறப்படுகிறது. ஆனால் அரசியல் நிர்வாகப் போக்கே காரணமென எதிர் தரப்பினராலும், நடுநிலைமையினராலும் இயம்பப் படுகிறது. நல்லதையும் பழித்துக் கூறும் நச்சுப் போக்கினரை எவ்வகையிலும் திருப்தி படுத்த முடியாது. எனவே, நடுநிலையினரின் மனப்போக்கை முன் வைத்து ஆராய்தல் அவசியம்.

அகவிலை கொடுமைக்குக் காரணம் பற்றாக்குறையென்பது தீர்ந்து போன முடிவு. பற்றாக் குறை எப்படி ஏற்பட்

கோபி மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ கே. ராஜாராம்

அந்நிய ஆதிக்கத்தோடு அஞ்சாது சமர்புரிந்து விடுதலை தேடித்தந்த மாபெரும் ஸ்தாபனமான காங்கிரஸ் மகா சபையின் 45 வது சென்னை மாகாண அரசியல் மகாநாடு மதிப்பிற்குரிய மாகாண தலைவர் ஸ்ரீ கே. ராஜாராம் அவர்கள் தலைமையில், (6, 7—12—58) தேதிகளில் கோபியில் கூடுகிறது. மகாநாட்டிற்குத் தலைவராய் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்ட அன்னாரை தொழில் வாழ்த்துகிறது. திறமைசாலியான ஸ்ரீ கே. ராஜாராம் அவர்கள் தலைமையில் கூடும் இம்மகாநாடு, நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தவிர்க்க நல்ல வழி காட்டு மென்று எதிர்பார்க்கிறோம்.

டது? யாரால் ஏற்பட்டது? என்பவைகளை ஆய்ந்து அறியவேண்டியது இன்றியமையாததாகும். விவசாயத்தை அடிப்படையாய்க் கொண்ட நம் நாட்டில் விவசாயத் தொழில் குறைந்து விட்டதென்று சொல்வதுவெட்கக்கேடேயன்றி வேறல்ல. தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாய் விளங்கும் தஞ்சை ஜில்லாவில் அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டு ஆந்திர அரிசி அங்குபோய் அகவிலைக்கு விற்பனையாகிறதென்பது எவ்வளவு விபரீதமான மாறுதல் என்பதை நாம் விவரிக்கவும் வேண்டுமோ! தஞ்சை அரிசி மலையாளத்துக்குக் கொண்டுபோகப்பட்டதும், ஆந்திர அரிசி தமிழ் நாட்டில் உலவுவதும் அரசியல் கொள்கையாலேயே (மண்டல அமைப்பு) என்பது புலனாகிறது.

விவசாயத்தொழில் குறைந்து விட்டதாய்க் கூறப்படும் காரணத்தையும் ஏற்க வேண்டியதுதான். உத்தியோகம், வர்த்தகம் இவற்றை முன்னிட்டு விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்த கிராமவாசிகளில் பெரும்பாலானோர் நகரவாசத்தை மேற்கொண்டனர். அதன் பயனாய் விவசாயத்தொழில் குறைவுபடாதிருப்பதற்கில்லை. விவசாயத்தின் அதிமுக்கியத்துவத்தை நன்கு பிரசாரம் செய்யப்படாததும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டோர்க்கு கணிசமான உதவிகள் புரியப்படாமையும் காரணமெனக் கூறலாம்.

விவசாயத்தொழில் குறைந்துவிட்டதோடு அந்நிய நாட்டு அத்தியாவசியப் பொருள்கள் கணிசமான அளவில் இறக்குமதியாகாததும் இன்றைய நெருக்கடிக்குக் காரணம் என்பது மிகை அல்ல.

144859.

நம் நாட்டு மக்கள் வெளிநாட்டு உற்பத்திப் பொருள்களை பெரும் அளவில் உபயோகிப்பதில் தேர்ந்துவிட்டனர். அவை அத்தியாவசியமானவையாயும் பழக்கப்பட்டு விட்டன. தேவைக்குத் தக்கவாறு இறக்குமதி செய்யப்படாத காரணத்தால், சொற்ப அளவில் கிடைக்கும் அந்த அத்தியாவசிய பொருள்களின் விலை அளவுக்கு மீறியதாகி விட்டிருக்கிறது. இந்த இக்கட்டான நிலையிலிருந்து மக்களின் அவதி நிலையைப் போக்க சுலபச் செலாவணி திட்ட அடிப்படையில் வெளிநாட்டு அத்தியாவசிய பொருள்களை கணிசமான அளவில் உடனடியாய் இறக்குமதியாக ஆவனச் செய்தல் அவசியம். இத்தகைய உருவான செயல்கள் மூலம்தான் இன்றைய நெருக்கடியை சமாளிக்க முடியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கோவை ஜில்லா மிகவும் முற்போக்கானது. தொழில் பிரமுகர்கள் அடங்கிய கோவை ஜில்லாவிலுள்ள கோபிச்செட்டிப்பாளையத்தில் அரசியல் மகாநாடு கூடுவது பாராட்டத்தக்கதாகும். தலைவர் ஸ்ரீ கே. ராஜாராம் அவர்கள் நாட்டின் நிலையை நன்குணர்ந்தவர். அவரின் சீரிய தலைமையில் நாட்டின் சமூக நிலைக்கான திட்டங்கள் உருவாகுமென்று நம்பி எதிர்பார்க்கிறோம்.

வரவேற்புக்குழு தலைவராய் நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமண்யம் அமைந்துள்ளது நமது நம்பிக்கையை பலப்படுத்துகிறது. அமைச்சர்களான ஸ்ரீ காமராஜ், ஸ்ரீ பக்தவத்சலம் ஆகியோர் இதில் பங்கேற்றுக் கொள்வதால் இம்மகாநாட்டின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது.

மேலும் இந்திரா காந்தி உள்நாட்டு அமைச்சர் ஸ்ரீ கோவிந்தவல்லப பந்த் அவர்களும் இம்மகாநாட்டில் கலந்து கொள்வதால் தமிழ்நாட்டின் உயர்வுக்கான பொறுப்புணர்ச்சியுள்ள திட்டங்களை வகுத்து நிறைவேற்றி செயல்படுத்துவார்கள் என்பதில் சிறிதும் ஐயங்கொள்ளத் தேவையில்லை.

———

பாராட்டுகிறோம்

அண்மையில் சென்னை கார்ப்பொரேஷன் மேயர், உதவி மேயர் தேர்தலில் போட்டியின்றி மேயராய் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ கே. கமலக்கண்ண முதலியார் அவர்கட்கும், உதவிமேயர் ஸ்ரீ C. V. திருவேங்கடம் பிள்ளை அவர்கட்கும் நமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.



ஒளிக் கதிர்

முதல் அமைச்சர்

ஸ்ரீ கே. காமராஜ்

வீரர் வ. உ. சி. அவர்கள் சுதேசிக் கப்பலை ஓட்டிய அந்த நாளை, இந்திய நாட்டின் வரலாற்றிலே ஒரு பொன்னான நாள் எனலாம். அன்றுதான் அசைவிலா ஊக்கத்துடன் அவர் எண்ணித் துணிந்த கருமத்தை இனிதே நிறைவேற்றினார்.

எண்ணம் நிறைவேறும் வரையில் தளராது பாடுபடக் கூடிய பெரியோர்கள் மிகச் சிலரே. அவர்களில் திரு. வ. உ. சி. யும் ஒருவர். ஒரு நாட்டை ஆளும் அரசினராலோ, அல்லது பெரும் செல்வந்தர்களாலோ மட்டும் முடியக்கூடிய கப்பலோட்டும் அரிய செயலைத் திரு. வ. உ. சி. அவர்கள் தாம் ஒருவராகவே நின்று செய்து காட்டினார். அரசாங்கத்தினரின் போட்டிக்கு இடையே தனி மனிதராக நின்று இதைச் சாதித்தார்.

சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணமே வ.உ.சி.யை ஒரு சிறந்த தேச பக்தி மிகுந்த வீரராக்கியது. அவர் மனதில் நிரம்பியிருந்த தணியாத சுதந்திரத் தாகமும், அந்நிய ஆட்சிக்கு எதிராகத் தோன்றிய எதிர்ப்பு உணர்ச்சியும் ஆக்கவேலைகளுக்குப் பயன்பட்டன.

நமது அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பொருள்கள் அனைத்தும் தாய் நாட்டிலேயே உற்பத்தியானவையாக இருக்க வேண்டும் என்பதே வ.உ.சி.யின் எண்ணமாகும். சிறந்த தேச பக்தராகிய விபின் சந்திர பாலரின் பிறந்த தின விழாவன்று திரு. வ. உ. சி. அவர்கள் ''உள்நாட்டுத் துணிகளை அணியுங்கள்! கைத்தறிக்குப் புத்துயிர் கொடுங்கள்'' என்று இந்திய மக்களை வேண்டிக்கொண்டார்.

வாழ்க்கையில் தன்னம்பிக்கையைச் சிறிதும் இழக்காமல் வாழ்ந்து காட்டியவர் திரு. வ. உ. சி. ஆவார். அவர் சிறையிலிருந்த காலத்தே அவர் ஆரம்பித்த சுதேசிக் கப்பல் கம்பெனி நிலைகுலைந்தது. அவர் சிறையிலிருந்து வெளிவந்த நேரத்தில் அவரது வழக்கறிஞர் பட்டத்தையும் அந்நிய அரசாங்கம் பறித்து விட்டிருந்தது. சிறை தந்த கொடுநோயுடன் வெளிவந்த வ. உ. சி. சிறிதும் சித்தம் கலங்கவில்லை. தமது குடும்பத்தை அழைத்துக்கொண்டு தமிழகத்தின் பல நகரங்களுக்கும் சென்றுவிட்டு, முடிவில் சென்னை நகரம் வந்தடைந்து வாணிபம் செய்யத் தொடங்கினார். இந்தச் சமயத்தில்தான் திரு. வ. உ. சி. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வுடன் தொடர்பு கொண்டு தொழிற் சங்கங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி செய்து வந்தார்.

இவ்வாறு இவர் வாழ்ந்த காலத்தில்தான் இவரது ''கொடை வளம்'' நன்கு வெளிப்பட்டது. வாணிபத்தால் வந்துகிட்டிய சிறு வருவாயிலும் ஒரு சிறிது மற்றவர்களுக்குக் கொடுத்து வந்தார். எத்தனையோ சமயங்களில் வ. உ. சி. தமது மனைவியிடமிருந்து நகைகளை வாங்கி மற்றவர்களுக்குக், கொடுத்திருக்கிறார் என்னும் உண்மையே அவருடைய இரக்க உள்ளத்தை நன்கு புலப்படுத்தும்.

கொடை வளத்தையும் ஒரு வகையான வீரம் என்றே சொல்லலாம். வ. உ. சி. யிடம் நெஞ்சுரத்துடன் இந்த வீரமும்

ஸ்ரீ வ. உ. சிதம்பரனாரின்
அருந்தவப்புதல்வர்
ஸ்ரீ வ. உ. சி. சுப்பிரமணியம்

அமைந்திருந்தது. இவரது நெஞ்சுரம் கப்பல் ஓட்டியது. இவரது கருணை உள்ளம் மற்றவர்களின் கவலையை நீக்கியது. சுருங்கச் சொன்னால் அனைவருக்கும் வழிகாட்டும் முறையில் வாழ்ந்தவர் திரு. வ. உ. சி. ஆவார்.

அவர் வாழ்க்கை நமக்கும் ஒரு வழிகாட்டியாக அமைய வேண்டும். பலவித பாதக சாதகமான சூழ்நிலைகளுக்கிடையில் நாட்டின் முன்னேற்றத்துக்காக அரிய பெரிய திட்டங்களை வகுத்து அவைகளைச் செயல்படுத்தி வரும் நமக்கு வ. உ. சி. யின் நெஞ்சுரம் வேண்டும். மகாகவி பாரதி பாடியது போல் மனதில் உறுதியும், வாக்கில் இனிமையும், நினைவில் நல்லதும் வேண்டும்.

வ. உ. சி. யின் திருநாமம் சுதந்திரச் சூரியனின் ஒளிக் கதிர்களில் ஒன்று. அந்த ஒளிக் கதிர் இன்றும் இனி என்றும் நமக்கெல்லாம் குன்றாத ஒளி காட்டி, நாட்டை முன்னேற்றும் வழிகாட்டியாக அமையுமாக.

அயர்லாந்தில் இத்தகைய தேசத் தியாகிகளுக்கென்றே ஒரு நினைவு மண்டபம் கட்டப்பட்டு அதில் அவர்களுடைய உருவச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளனவாம். தமிழகத்தில் அம்மாதிரி இல்லாவிடினும் தேசத் தியாகிகளுக்குத் தக்க நினைவுச் சின்னம் ஏற்படுத்த வேண்டும் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. ஒட்டப்பிடாரத்தில் அவர் வசித்த வீட்டை இதற்கென்றே அரசாங்கம் வாங்கியுள்ளது. இந்த இல்லம் இந்த வீரத் தியாகியின் நினைவுச் சின்னமாக என்றும் விளங்கி அவருடைய தியாகத்தை எந்நாளும் நமக்கு நினைவூட்டிவரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வாழ்க வ. உ. சி. யின் திருநாமம்!

ஸ்ரீ வ. உ. சிதம்பரனாரின் பேத்திகள்
மரகதம், விஜயாவும்
"தொழில்" ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் குமாரி
துர்க்காவும்.

தொடர் நாவல் :

2

அடித்த கை அணைத்தது

"தன் தாயின் பிடிவாத குணத்துக்குக் கட்டுப்பட்டு ஓர் குடிகார மாமனையா மணந்துக் கொள்வது? என்னுடன் படித்த பெண்கள் நையாண்டி செய்வார்களே! நாட்டில் எத்தனையோ கௌரவமான குடும்பப் பெண்கள், வாழ்வு சீரழிந்து அல்லலுறுகிறார்கள், குடிகார கணவன் மார்களினால்! எல்லாம் தெரிந்திருந்தும் நட்டாற்றில் இறங்குவது போல் என் வாழ்வை நானே கெடுத்துக் கொள்வதா? பெண்கள் எவ்வளவு அன்பைக் காட்டினாலும் அறிவை போதித்தாலும் குடிகாரர்கள் நல்வழியில் திருந்த மாட்டார்கள்? அது அவர்கள் பிறவியிலே ஒட்டிப்போன கறை," என்று லலிதா எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

"அம்மா! ஏன் அழுகிறீர்கள்? அப்பாவின் போக்கிற்கும், உங்கள் போக்கிற்கும் ஒத்துவரவில்லை. உங்கள் பெண்ணை செல்வமாக

2

முன் கதை.....

லலிதா: பி. ஏ.
சுந்தரம்: லலிதாவின் தந்தை
சுசீலா: சுந்தரத்தின் மனைவி

லலிதா; பி. ஏ. படிப்பை முடித்துக்கொண்டு வீடு திரும்பியதும், தந்தை சுந்தரம் பெண்ணின் கல்யாண முயற்சியில் ஈடுபடுகிறார். தாய் தடுக்கிறாள். இந்நிலையில், சரஸ்வதி மில் உரிமையாளர் சுந்தரத்தைத் தேடிவந்து தன் மில் மானேஜர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு கூறிப்போகிறார். ஓர் நாள் கல்யாணப் பிரச்னையின் போது தாய்க்கும், தந்தைக்கும் வாய்ப்போர் மூள்கிறது. அப்போது தன் மனநிலையை கட்டவிழ்த்து விடுகிறாள் தாய் சுசிலா: தன் தம்பிக்கே பெண்ணைக் கொடுக்க வேண்டுமென்று வாதாடுவது கண்டு தந்தையும், மகளும் சீற்றமடைகின்றனர்; சுசிலாவின் தம்பியான சிவகுமாரன் ஓர் குடிவெறியன்; ஒழுக்கங்கெட்டவன்.

அடுத்து வருவனவற்றை இனி படியுங்கள்............

வளர்த்து, பி. ஏ. வரை படிக்க வைத்தீர்கள், இதுதான் நீங்கள் செய்த குற்றம்! குற்றமென்ன? அப்பாவின் கௌரவத்திற்கு நான் படித்துத் தேறியது பெருமைதான். ஆனால் தங்கள் எண்ணத்திற்கு நான் படித்திருக்க வேண்டியதில்லை. உடன் பிறந்த சகோதரன் என்ற காரணத்தால், பெற்றெடுத்த தாயே என் வாழ்வை பலியிட முற்படுகிறீர்களே! என் மாமனுக்கு ஒழுக்கம் என்றால் என்னவென்றே தெரியாது. படிப்பிலும் பூஜ்யம். உழைத்துப் பிழைக்கவும் தெரியாது. அநாகரிகத்தில் மூழ்கிய அப்பாவி. இரவும் பகலும் குடியே தன் ஜீவநாடி என்று எண்ணுகிறவர். தன் வீட்டிலேயே கன்னக்கோல் வைத்துப் பொருளை கொள்ளை அடித்து கூத்தியிலும், குடியிலும் கும்மாளம் அடிக்கும் தங்கள் தம்பிக்கு நான் வாழ்க்கைப் பட வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிறீர்கள்? புதுமையிலும் புதுமையாய் இருக்கிறது உங்கள் போக்கு! குடியர்களை மணந்த பெண்கள் கண்ணீர் வடித்தது போதாதா? வாழ்க்கை

யில் அவர்கள் கண்ட சுகமென்ன? அடி, தடி, அவமானம், அல்லல், பெற்ற மகளை பந்தாடல், இந்த கதிக்கு என்னை ஆளாக்கி விடாதீர்கள் அம்மா'' என்று லலிதா வார்த்தைகளை இயந்திரம் போல் கொட்டினாள். அவள் குரல் விசனத்தால் கம்மி யிருந்தது.

''என்ன துணிச்சல்! மரியாதைகூட இல்லாமல் தாறுமாறாக பேசுகிறாயே! எங்கிருந்தடி வந்தது உனக்கு இவ்வளவு தைரியம்?'' என்று லலிதாவின் கன்னத்தில் 'பளார்', 'பளார்' என்று அறைந்தாள் சுசீலா.

சுந்தரத்திற்கு கோபம் எல்லை மீறி விட்டது. ''புத்திசாலியான என் பெண் நியாயத்தைப் பேசினாள். நியாயம் பேசினதற்கு தண்டனையா இது? சுசீலா! நீ பெற்ற பெண்தானடி லலிதா. அவள் எதிர்கால வாழ்க்கையை எண்ணிப்பேசினாள். அந்தப் பேச்சிலே எந்தக் குற்றத்தைக்கண்டு விட்டாய்? மனந்துணிந்து என் எதிரிலேயே அடித்து விட்டாயே! பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தாயே! அது உன் அறிவுக்கு எட்டவில்லையா? லலிதா அறிவுள்ளப் பெண்ணாகத் தோன்ற வில்லையா? உன் வழியிலே வந்து தோன்றிய அந்த வறியனான சிவகுமார் தானா உன் கண்களிலே காட்சியளிக்கிறான்?'' என்று சுந்தரம் பெரும் இறைச்சல் போட்டுப் பேசினார்.

சுந்தரத்தின் கண்கள் அனற்பிழம்புகளை வீசின. லலிதாவின் கன்னங்கள் இரண்டும் கோவைப்பழம் போல் வீக்கங் கொண்டு இருந்தன. அவள் கண்ணீர், ஆற்று நீராக வழிந்தோடியது. லலிதா தேம்பித் தேம்பி அழுது கொண்டிருப்பதைப் பார்க்க பார்க்க சுந்தரம் மனது கலங்கி அவரையும் மறியாமல் ஒரு துளி கண்ணீரையும் விட்டுவிட்டார். ''அவள் கிடக்கிறாள் எழுந்திரும்மா!'' என்று மகள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு மாடிக்குச் சென்று விட்டார்.

ஆத்திரத்தில் அடித்துவிட்டாளே தவிர லலிதாவின் அழுகை, சுசீலாவின் மனநிலையைச் சிதறடித்து விட்டது. தன் தவறை நினைந்து நினைந்து அழுதுக்கொண்டேயிருந்தாள். பெற்ற மனமில்லையா? மகளும் தன் போக்கிற்கு மாறாக இருப்பதைப்பற்றி வெறுப்பே' அடைந்திருந்தாள். அவளை இதமாய் தன் வழிக்குத் திருப்பாமல் முரட்டுத் தனத்தைக் கையாண்டது பிசகு என்று உணர்ந்தாள். அதே சிந்தனையில் ஆழ்ந்திருக்க அவள் அங்கேயே சாய்ந்து கண்ணயர்ந்து விட்டாள்.

தன் மகளோடு சென்ற சுந்தரம் மாடியை விட்டு கீழே இறங்கவில்லை. இரவு மணி எட்டு அடித்துக்கொண்டிருந்தது. மாதா கோயில் மணியோசையும் காற்றில் கலந்து தேய்ந்தது. நிமிஷமுள்ளை தள்ளிக்கொண்டு மணி காட்டுமுள் ஒவ்வொரு எண்ணைக் கடந்து கொண்டிருந்தது. பொல்லாத குடும்பச் சண்டை எல்லாருடைய உணவுக்கும் முட்டுக்கட்டையாய் முடிந்தது. பசிதாபத்தையும் மறந்து தாய், தந்தை, மகள் மூவருமே நித்திராதேவியின் அணைப்பிற்குள்ளாயினர்.

3

பிணக்கு தீர்ந்தது; பிரியம் வளர்ந்தது

செங்கதிரோன் குணதிசை அடிவானமுகட்டைக் கடந்து ஜாஜ்வல்யமாய் மேல்வானத்தை நோக்கி பவனிவரத் தலைப்பட்டான். சுசீலா வழக்கம் போல் அதிகாலையில் எழுந்திருந்து 'பைல'ரைப் பற்றவைத்தாள். தெருவாசலில் சைக்கில் மணியோசை ஒலித்தது. கதவைத்திறந்தாள். வாடிக்கையாய்ப் பால் வார்க்கும் பால்காரன் காத்திருந்தான். சுசீலா பாலை வாங்கிக்கொண்டு வந்து, முதலிலே காப்பியை தயார் செய்தாள். முன் இரவு சாப்பாடு இல்லாததால் களைப்பாகவே இருந்தது அவளுக்கு. வழக்கத்திற்கு மாறாக அன்று காலை இரண்டு வெள்ளி டம்ளர் காப்பியைக் குடித்தாள். அதற்குமேல் தான் சுசீலர்வின் உடல் சுறுசுறுப்பை யடைந்தது.

காலை ஏழுமணி வரை சுந்தரமும் லலிதாவும் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. மணிக்கு மணி சுவர் கடிகாரம் எச்சரிக்கை செய்தும் எழுந்திருக்கவில்லை. அவர்கள் இஷ்டம்போல் எப்போது எழுந்திருப்பார்களோ பார்க்கலாம் என்றும் எண்ணினாள் சுசீலா. ஆனால் மனக்குரங்கு சும்மா இருக்குமா? அதோடு குடும்ப முன்னேற்றத்திற்கான காரியம் வேறே காத்திருக்கிறதே! சண்டையில் நிதானத்தை இழந்துவிட்டாரோ என்று குழப்பமடைந்தாள். திடுதிடுவென்று மாடியை நோக்கி ஓடினாள், 'பெட்' காப்பியை கையில் ஏந்தியபடி சுந்தரத்தின் அறைக்கு.

சுந்தரம், சுசீலா வந்து எழுப்பாதவரை படுக்கையைவிட்டு எழுந்திருப்பதில்லை

என்று விழித்துக்கொண்டு தான் காத்திருந்தார். சுந்தரம் எண்ணியபடியே தான் சுசீலா தானாக வந்தாள். "என்னங்க, படுக்கையை விட்டு எழுந்திருக்க மனசு வரல்லேயா? சண்டை களைப்பு இன்னும் தீரவில்லையா" என்று சுந்தரத்தை தட்டி எழுப்பினாள் சுசீலா. சுசீலா காப்பியை ஊற்றி கொடுத்தாள். சுந்தரம் சிரித்தவாறே காப்பியை வாங்கிக்கொண்டார். அந்நிலையில் சுசீலாவின் முகம் வெட்கத்தால் வெளிறிட்டது. பிறகு அவள் அங்கே நிற்கவில்லை. 'விர்' ரென்று தன் மகள் படுத்திருக்கும் அறைக்குள் நுழைந்து விட்டார்.

லலிதா படுக்கையில் குப்புற படுத்திருந்தாள். இரவெல்லாம் அழுது அழுது அவள் கண்கள் வீக்கங்கண்டிருந்தன. பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்தது அவள் தோற்றம். சுசீலா லலிதாவின் தலையை வருடிவிட்டவாறு முகத்தைத் திருப்பினாள். இரத்தபாசமில்லையா? மகளைக் கண்டதும் சுசீலாவுக்கு விக்கலும், விம்மலும் மீறிக்கொண்டு வந்தன. அவள் கன்னங்களில் ஏற்பட்ட வீக்கம் அழுந்திய பாடில்லை. தாயின் விம்மல் சப்தத்தைக் கேட்டு லலிதா கண்ணைத் திறந்து பார்த்தாள். எந்தக் கையால் தன் கன்னத்தில் அடித்தாளோ, அதே கையால் தடவி கொடுப்பதைக் கண்டு மனம் நெகிழ்ந்தாள். லலிதா, 'கோ' வென்று அழுதவாறு கிழிறங்கி தாயைத் தழுவிக் கொண்டாள். தாயின் கைகள் இறுக அணைத்துக்கொண்டன மகளை.

சுசீலாவுக்கும் ஆத்திரம் தாளமுடியவில்லை. தேம்பித் தேம்பி அழுதாள். அப்போது தான் அடிப்பட்டவளைப் போல் அழுதாள்.

"அழாதே லலிதா! நான் அறிவை இழந்துவிட்டேன் ஆத்திரத்தில். செல்வமாக வளர்த்த உன் சிங்கார கன்னத்தில் தழும்பேற்றி விட்டேன்; பார்த்தாலே என் வயிறு பற்றி எரிகிறது" என்று லலிதாவை கட்டித் தழுவி முத்தமிட்டாள். அவள் கண்களை பெருகிய கண்ணீர் தேங்கி நின்று மறைத்தது.

தாயும் பெண்ணும் சேர்ந்தாற் போல் அழுகைப் படலத்தில் ஆழ்ந்திருந்த சமயம் சுந்தரம் படுக்கையை விட்டு கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார். அப்போது லலிதாவின் அறையில் நடக்கும் காட்சிகள் அவரால்

வ. உ. சி. கலைக்கூடம்

(சென்னை அரசினர் உதவிப்பெற்றது)

★

தலைவர்களின் சிலைகள்

பொம்மைகள்

சிறந்த வர்ண ஓவியங்கள்

சினிமா ஜோடனைகள்

முதலிய கலைப் படைப்புக்களுக்கு

சிறந்த தோர்

கலைக் கோயில்

விரைவில் திறக்கப்படும்

உரிமையாளர் :

R. T. கிருஷ்ணமூர்த்தி

★

அணுகுக :

வ. உ. சி. கலைக்கூடம்

பூந்தோட்டம்.

35/60, சந்நிதி தெரு, வடபழநி,

சென்னை.

தெரிந்துக் கொள்ளமுடியாமல் போய் விட்டது. "இவ்வளவு நேரம்வரை யாரும் கீழே இறங்கி வரவில்லையே என்ற எண்ணத்தோடு படியேறி போய்க் கொண்டிருந்தார். அங்கே அவர்களின் அழுகைக் குரல் கேட்டதும் சுந்தரத்திற்கு தூக்கி வாரிப்போட்டு விட்டது. லலிதாவின் அறையினுள்ளே போய் பார்த்தார். சுசீலாவின் மடியில் லலிதா தலை சாய்த்துக் கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். சுசீலா தன் கண்ணீரால் லலிதாவின் முகத்தை நனைத்துக் கொண்டிருந்தது வேடிக்கையாய் இருந்தது சுந்தரத்திற்கு.

"பேஷ்! மேனகா-சகுந்தலா காட்சி நடக்கிறது போலும்! அறியாப் பெண் ஏதோ கோபமாய் கிடக்கிருள். அதற்கு வேண்டிய சமாதானம் சொல்லி அழைத்து வராமல் அவளோடு சேர்ந்து அழுதுக்கொண்டிருந்தால் அவள் மனசு எப்படி மாறும்? நீயும் சேர்ந்து வாழப் போகிறவள் போல் அல்லவா இருக்கிறது உன் அழுகையைப் பார்த்தாள்! வெட்கமில்லாமல் காலையிலே ஒப்பாரி வைக்க இளம்பி விட்டாயே!" என்று ஆறுதலான வார்த்தைகளைக் கிண்டல் செய்தவாறு சொல்லி கீழே அழைத்து வந்து சேர்ந்தார் சுந்தரம்.

"லலிதா! நீ என்ன இன்னும் சிறு குழந்தையா? உன்னை அடித்தது வேறே யார்? உன் அம்மா தானே அடித்து விட்டாள்? பெற்றவளாச்சே அவள் மனசு சகித்துக் கொண்டிருக்குமா உன்னைகவனிக்காமல் இருக்க. போ! சீக்கிரம் ஸ்நானம் செய்து விட்டு நல்ல டிரஸ் செய்து கொண்டு வா; சரஸ்வதி மில்லின் உரிமையாளர் வீட்டிற்கு போகலாம்" என்று தன் மகளுக்கு உற்சாகத்தை மூட்டி விட்டார் சுந்தரம்.

சுந்தரம் சொல்லி 15 நிமிஷம் இருக்கும். லலிதா சிட்டாகப் பறந்து தன்னை அலங்காரம் செய்து கொண்டு புறப்பட தயாராய் விட்டாள். சுசீலா, காலை 'டிபன்' தயார் செய்து விட்டாள் அதற்குள்ளாக.

"லலிதா! டிபன் சாப்பிடாமலா கிளம்பி விட்டாய்! உடம்பு என்னத்துக்குஆகும்? ராத்திரியும் சாப்பாடு கிடையாது. வாம்மா! கொஞ்சமாவது சாப்பிட்டு விட்டுப் புறப்படம்மா' என்றுகொஞ்சுங் குரலில் லலிதாவை கூப்பிட்டாள் சுசிலா. தினசரி தன் மகளோடு சாப்பிடும் சுந்தரம் இன்றுமாத்திரம் விட்டு விட்டா சாப்பிடமுடியும். "என்ன செய்கிருய் லலிதா?" என்று ஓர் அதட்டல் குரல் கொடுத்தார் சுந்தரம். என்ன செய்வது இந்த அதட்டலுக்கு, அவள் போய்தானே ஆக வேண்டும்?

சுந்தரம் என்றுமில்லாவிதமாய் அன்று மிடுக்கான டிரஸ் செய்து கொண்டார். மணி 10 ஆகிவிட்டது. லலிதாவும் சுந்தரமும் வெளியில் புறப்பட தெருவாசற்படி வந்து நின்ருர்கள். தெருவில் எந்த ஒரு டாக்ஸியோ ஆட்டோ ரிக்ஷாவோ காலியாக வந்துக் கொண்டிருக்கவில்லை. கொஞ்ச தூரம் நடந்தாகிலும் சென்று டாக்ஸியை பிடிக்கலாம் என்று எண்ணியவாறு தெருப்படியில் இரண்டடி வைத்து இறங்கினர் சுந்தரம்.

காதைத் துளைத்துக்கொண்டு 'ரெடில் பார்க்' கார் ஒன்று வந்து நின்றது வீட்டின் முன்னே. காரில் தனுஷ்கோடியாரே அமர்ந்திருந்தார். "வணக்கம் ஸார்! நாங்களும் புறப்பட்டுக்கொண்டிருக்கிரும், வண்டி கிடைக்காததால் கொஞ்ச தூரம் நடந்தாவது வண்டியை பிடிக்கலாம் என்று கிளம்பிட்டோம். எதிர்பாராமல் தாங்களே இங்கு வரும்படியாய் விட்டது ஆச்சரியமாய் அல்லவாயிருக்கிறது?"

"உங்களையும் என்னுடன் அழைத்துப் போகலாம் என்று தான் காருடன் இங்கு வந்தேன்" என்று கதவைத் திறந்து விட்டார் தனுஷ்கோடி.

சுந்தரமும் லலிதாவும் காரில் ஏறிக் கொண்டார்கள். காரும் பத்து நிமிஷத்தில் காற்று வேகத்தில் பறந்து சென்று நின்றது மில் வாசலண்டை. மூவரும் இறங்கினர்கள். வாட்ச்மேன், ஆபீஸ் பைல்களை எடுத்துக் கொண்டு முன்னே சென்ருன் தனுஷ்கோடி அறைக்கு.

மானேஜர் பொறுப்பை சுந்தரத்திடம் ஒப்படைத்தார் தனுஷ்கோடி. பிறகு மில் இயந்திரங்கள் இயங்குவதை சுற்றிக் காண்பித்தவாறு, ஒவ்வொரு துறையின் அதிகாரிகளையும் தொழிலாளர்களையும் அறிமுகம் செய்து வைத்தார் தனுஷ்கோடி.

சுந்தரம் அனைவருக்கும் தன் நன்றியை தெரிவித்துக்கொண்டார். சம்பந்தப்பட்ட இலாக்காக்களின் உத்தியோகஸ்தர்களுக்கும் தன் அன்பை புன் முறுவல் மூலம்

சமர்ப்பித்தார். தன்னை கவுரவித்து மில்லின் நிர்வாகத் துறையில் இப்பெரும் பொறுப்பை தனக்களித்த மில் உரிமையாளர் தனுஷ்கோடியார் அவர்களைப் பெரிதும் பாராட்டினார் சுந்தரம். சுந்தரத்தின் அதிகாரப் புயலும் அன்றைய தினத்திலிருந்து சரஸ்வதி மில்லில் வீச ஆரம்பித்தது.

பொறுப்பை ஏற்றுக்கொண்ட முதல் தினமாதலால் லலிதாவுடன், அன்று இரண்டு மணிக்கே புறப்பட்டுவிட்டார் வீட்டிற்கு சுந்தரம். தன் தகப்பனருக்கு நடந்த உபசாரங்களும் மரியாதையும் லலிதாவின் உள்ளத்திற்கு எல்லை யில்லையாத ஆனந்தத்தை உண்டாக்கிவிட்டது என்றால் மிகையாகாது!

சந்தோஷச் செய்தியைக் கேட்க மிக்க ஆவல் உள்ளவளாய் தெருவாசற்படியில் வந்து எதிர்பார்த்திருந்தாள் சுசீலா. போரில் பகைவர்களை வென்று வெற்றிமாலை சூடி நாடு திரும்பும் வீரனைப் போல் கையில் பூமாலையுடன் டாக்ஸியில் இருந்து இறங்கினார் சுந்தரம். மலர்ந்த முகத்தோடு காரிலிருந்துத் துள்ளிக் குதித்து தந்தையைத் தொடர்ந்து வந்தாள் லலிதா. சுசீலாவுக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. சுந்தரம் தன் கையில் வைத்திருக்கும் பூமாலையை சுசீலாவுக்கு முதல் காணிக்கையாக கொடுத்துவிட்டு வீட்டினுள்ளே சென்றார். ஆனால் லலிதா தன் தாயைச் சேர்த்து அணைத்துக் கொண்டாள் ஆனந்தத்தால். சுசீலா லலிதாவின் நெற்றியில் செல்வமாக முத்தமிட்டு உள்ளே அழைத்துச் சென்றாள்.

"அம்மா! அப்பாவுக்கு, மில்லில் எவ்வளவு வரவேற்புத் தெரியுமா? அடேயப்பா! என்ன மரியாதை! என்ன உபசரிப்பு! நான் பிரமித்து விட்டேன் அம்மா! வேலை செய்கிறவர்கள் அத்தனைபேரும் வணக்கம் செய்தார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் வணக்கம் தெரிவித்துக் கொள்வதற்கே அப்பா திணறிவிட்டார்!" என்று லலிதா சொல்லி சொல்லி பூரித்துப் போனாள். அவள் பேசும் உற்சாகத்தைப் பார்த்துக்கொண்டே மனைவியின் பக்கம் முகத்தை திருப்பினார் புன்முறுவலுடன் சுந்தரம்.

—4—

தோழியின் அழைப்பும், லலிதாவின் களிப்பும்

நாட்கள் ஓடின. மாதங்கள் மாறின. வருடம் இரண்டைக் கடந்து மூன்றும்

CITY LIGHT BRAND STEEL TRUNK WORKS

Manufacturers of Steel Trunks & Consumer Goods

339, Esplanade, Madras-1

ஸ்டீல் ட்ரங், சூட்கேஸ், கேபின் ரகங்கள், பிலிம்பாக்ஸ்கள், பிலிம் ரேக்குகள், வாளிகள், விவசாயக் கருவிகள், பக்கட்டுகள், பில்டிங் சாமான்கள் குறித்த காலத்தில் ஆர்டர் பேரில் தயாரித்து கொடுக்கப்படும்.

Sole Proprietors:

K. Kannabiran Mudaliar,
K. Radhakrishna Mudaliar.

Phone : 3619

Star Steel Trunk Works,

★

MANUFACTURERS OF

Star of India Steel
Cabin & Suit Cases

305, N. S. C. B. Road,
MADRAS-1

★

OFFICE :

84, Mint Street, Madras-3

★

ஸ்டீல் டிரங்க், சூட்கேஸ், பிலிம் ரேக்குகள், பாக்ஸ்கள் கேபின் ரகங்கள், விவசாயக் கருவிகள், பக்கட்டுகள், பில்டிங் சாமான்கள் ஆர்டர் பேரில் தயாரித்துத் தரப்படும்.

PROPRIETOR :

H. A. கான்,

ஆண்டை எட்டிப்பார்த்தது. பதவி வேட்டையும் பணம் சம்பாதிக்கும் கொள்ளை ஆசையும் கொண்டுவிட்ட சுந்தரம், தன் மகளின் திருமணத்தைப் பற்றி ஒரு நிமிஷமாகிலும் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. பெரிய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ளவரல்லவா? ஏதோ பெண் செல்வமாக வளர்கிருள் என்று அசட்டையாக இருந்து வந்தார் சுந்தரம்.

மாப்பிள்ளை போட்டி நடந்த சமயங்களில் பெற்றவளான சுசீலா முட்டுக்கட்டை போட்டாள். பெற்ற தந்தையோ மணமாகாத மகளை பெரும் பாரமாக எண்ணினர். பருவப் பெண். அதிலும் நாகரிக வாழ்க்கையில் நாட்டங்கொண்டவள்: அவள் தன்னடக்கத்தோடிருப்பது தன் அதிர்ஷ்டமே யென்றெண்ணினர். நவநாகரிக மென்ற பெயரால் பெண்களுக்குக் கொடுக்கப்படும் சர்வ சுதந்தரங்களையும் தன் மகளுக்கு தந்திருந்தார் சுந்தரம்.

நாடகம், நாட்டியம், சினிமா போன்ற கலை நிகழ்ச்சிகளைக் காண்பதில் லலிதாவுக்கு விருப்பம் அதிகம். நாகப்பட்டினத்தில் அப்போது சினிமா காட்சி நடந்து கொண்டிந்ததாயினும், மஞ்சரி கோஷ்டியாரின் நாட்டியங்கள் நடக்கப்போவதாய் ஆர்ப்பாட்டமான விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன.

மஞ்சரி வடக்கே இமயம் முதல் தென் குமரி வரையிலும் பெரும் புகழ்பெற்ற நாட்டிய ராணி. தன் நாட்டியத்தின் மூலம் ரஸிகர்களின் உள்ளத்தை நிரந்தரமாய் கவர்ந்து விட்டிருந்தாள்.

நாகையில் ரஞ்சித் மஹால் நல்ல வசீகரமானது. கட்டிடமே புதுமை வேலை பாடுகளுடன் கூடியது. சின்ஜோடனைகளும் கண்ணைப்பறிப்பனவாய் இருந்தன. ஒரு துளி வியர்வை முகத்தில் அரும்பமுடியாத அளவிற்கு குளிர் சாதனங்களால் பொறுத்தப் பட்டிருந்தன.

அவர்கள் நாகையில் முகாமிட்டு ஒருவாரமாகியது. நாட்டிய கலா ரத்னம் மஞ்சரியின் "சிவசக்தி" நடனம் பார்க்கத் தக்கது என்ற வாசகம் சுவரொட்டிகளில் பளிச்சிட்டன. ஒவ்வொரு தெருவிலும் கை வண்டிகளில் பேண்டு வாத்தியங்கள் முழங்க துண்டுப் பிரசுரங்கள் வாரி இறைத்து விளம்பரம் செய்தார்கள். விளம்பர ஆடம்பரங்களைக் கண்ட ஊர் ஜனங்கள் யாவரும் துடியாய் துடித்தார்கள். ஏன்? காணாத காட்சியைக் காணப்

போகிறோமே யென்ற உத்சாகத்தால். இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே எல்லா வகுப்புகளும் (ரிஸர்வ்) பூர்த்தியாகி விட்டது என்றால் நடனக் கோஷ்டிக்கு முக்கியமாய் மஞ்சரிக்கு அவ்வூர் மக்கள் கொடுத்துள்ள மதிப்பு விளங்குகிறதன்றோ!

வ. ந. சொக்கலிங்கம் செட்டியார் அந்நாட்டிய கண்டிராக்டின் பொறுப் பேற்று இருந்தார். அவர் கொழுத்த பணக்காரர், ஊர் அறிந்த ஆசாமி, பண லேவாதேவி தொழில். அவருடைய மகள் சாந்தாவும் லலிதாவும் ஒரே காலேஜில் படித்து பி. ஏ. தேர்வடைந்தவர்கள். உயிருக்கு உயிரான சிநேகிதைகள். முக்கிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தன்னுடன் லலிதாவை அழைத்து போகாமல் இருக்க மாட்டாள் சாந்தா. லலிதா தன் சொந்த வீடு போலவே அவள் வீட்டில் யாவரிடத்திலும் அளவளாவிப் பழகுவாள்.

நாட்டியத் தினத்தன்று சாந்தா திடீரென்று லலிதா வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். லலிதா சாந்தாவை ஆவலோடு வரவேற்று மாடிக்கு அழைத்துச்சென்றாள். சிறிதுநேரம் வேடிக்கையான பேச்சுகளில்பொழுதுபோக்கினர். இளங்குமரிகள் சேர்ந்துள்ள விடத்தில் கோலாகலத்திற்கும், கெக்களிப்புக்கும் குறைவிருக்குமா?

"லலிதா! உனக்காக ஒன்று கொண்டு வந்திருக்கிறேன். அது ஒரு செய்திதான். எதைப்பற்றித் தெரியுமா? இன்று மாலை 6-30 மணிக்கு ரஞ்சித் மஹாலில் நடைபெறும் நடனத்திற்கு நாம் போகவேண்டும். இதோ பார்! டிக்கட் ஒன்று உனக்காக கொண்டுவந்திருக்கிறேன். ஊம்!" என்று சாந்தா டிக்கட்டை நீட்டினாள், லலிதாவிடம்.

லலிதாவுக்கு வேடிக்கையாயும், உத்சாகமாயுமிருந்தது. "சாந்தா! டிக்கட்டை எனக்காகவும் வாங்கி விட்டாயா!" என்றாள் லலிதா.

என்னடி அப்படி கேட்கிறாய்? நடன கண்ட்ராக்ட் எடுத்திருப்பவர் என் அப்பா தானே! உனக்கு தெரியாதா என்ன? டிக்கட்டிலேகூட என் அப்பாவின் பேரு இருக்கே, நல்லா பாரடி!" என்றாள் பூரித்த முகத்தோடு சாந்தா.

(வளரும்)

Sri Marganatha Brand

STEEL TRUNK WORKS,

129, N.S.C. Bose Road, Madras-1

Factory: 89, RAJAJIPURAM

Wall Tax Road, Madras-3.

★

MANUFACTURERS OF STEEL TRUNKS, ALLIED PRODUCTS, OF AGRICULTURAL IMPLIMENTS, HOSPITAL REQUIREMENTS, BUILDING MATERIALS AND OTHER IRON AND STEEL MADE PRODUCTS.

●

Branches:

PEACOCK BRAND

Steel Trunk Works,

No. 1, Evening Bazaar, Madras-3.

Sarathy Industries

149, N. S. C. Bose Road,

MADRAS-1.

Prop: K. V. ALWAR.

உண்மைச் சம்பவங்கள்!

[தொடர் நிகழ்ச்சிகள்]



1889-ல் வாஷிங்டனில் கூடிய மகா நாட்டில் அமெரிக்கா பான் அமெரிக்கன் யூனியனில் சேர்ந்தது. *21*-அமெரிக்க ரிபப்ளிக் நாடுகளின் சர்வதேச கூட்டுறவைக் குறிப்பது அது.



1903-ல் கனரக விமானத்தை ஓர் மந்திரியின் மக்களான ரைட் பிரதர்ஸ் தயாரித்து பறக்க விட்டனர், வில்பர், ஆர்வில்ரைட் என்பவர்கள் தயாரிப்பவர்களாயிருந்தனர்.

1914 பனுமா கால்வாய் வெட்டுவதை பூர்த்திசெய்தனர். அட்லாண்டிக் பசிபிக் சமுத்திரங்களை அதன் மூலம் இணைத்தனர், *12000* மைல் தென் அமெரிக்காவை சுற்றவேண்டியதை மிச்சப்படுத்தியது.

1917-1918-ல் சுதந்திரத்தையும், நீதியையும் காப்பாற்ற அமெரிக்கா யுத்தத்தில் இறங்கியது. நடுநிலைவகித்தும் கெய்ஸரின் நீர் மூழ்கிகள் அடுத்தடுத்து அமெரிக்க கப்பல்களை தாக்கியதின் பயன் அது.

1920-ல் அமெரிக்க மாதர்க்கு ஆண்களுக்குள்ள சம அளவு ஓட்டுரிமை வழங்கப்பட்டது, அரசாங்கம். அரசியல் ஏற்பட்டகால முதல் முடக்கிவைக்கப்பட்டிருந்த பெண்களுக்கு இது ஓர் சுதந்திரமே!

1927-ல் அமெரிக்க விமானியான சார்லஸ் எ. லிண்ட்பர்க் தன் சிறுவிமானத்தில் நியூயார்க்கிலிருந்து பாரீஸ் செல்லும் ஒரே மூச்சு பயணத்தில் (எங்கும் இறங்காமல்) வெற்றி கண்டார்.

1934-ல் ஐக்கிய நாடுகள் உலக நாணயப் புழக்கத்தை முன்னிட்டு பண்டமாற்று ஒப்பந்தத்தை துவக்கியது. வெளிநாட்டுப் பொருள்களை சிறு அளவில் ஜனாதிபதி அனுமதித்தார். 25 ஆண்டுகளில் பெருகி விட்டது.



1935-ல் ஐக்கிய நாடுகளின் சமூக நல நிதிச்சட்டம் அமலுக்கு வந்தது. வயதானபின் உபகாரச் சம்பளம், வேலையற்றோர்க்கு உதவி நிதி, முதியோர்க்கும், அநாதைகளும், கண்ணற்றோருமான சிறுவர்க்கும் பாதுகாப்பு நிதியாக உதவ.

1941-1945, 2-வது உலக யுத்தம், 1941-ல் ஐக்கிய நாடுகள் யுத்தத்தில் குதித்தன. 1945-ல் சுதந்திரமும், சமாதானமும் நிறுவப்பட்டன. குழப்ப முற்றிருந்த நாடுகள் அதன்பின்தான் அமைதியைக் கண்டன.



1946-ல் தன் சொந்த சுதந்திர தினமான ஜூலை 4 ல் பிலிப்பைன் தீவுகளுக்கு ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் சுதந்திர மளித்தது. 1898 ஸ்பெயினிடமிருந்து அடைந்த அத்தீவுகளை சுய ஆட்சிக்குத் தகுதியடைந்ததும் சுதந்திரம் தருவதாய் வாக்களித்திருந்தது.

1948-ல் மார்ஷல் விமானம் உபயோகிக்கப்பட்டது. யுத்தத்திலும், அபிவிர்த்தியிலும் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு உணவு, தளவாடங்கள், நிர்மாண உதவிகளைச் செய்ய உதவும். 1948-ல் ரஷ்யாவில் வளைக்கப்பட்டிருந்த மேற்கு பெர்லினுக்கு இது நல்ல சேவை செய்தது.



1949-ல் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த ஸ்தாபனத்தை (நாட்டோ) ஸ்தாபித்தது. உலக சமாதானத்திற்காக நிறுவப்பட்ட இது அநீதியாய் தாக்கப்படும் நாட்டிற்கு உதவி செய்யும். இவற்றில் வல்லரசுகளும் சிற்றரசுகளும் பங்குகொண்டுள்ளன.

(தொடரும்)

சாயத் தொழில்

நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் நூலில் வர்ணம் ஏற்றும் நுட்பத்தை அறிந்துகொள்ள அவாவுறுவது இயற்கை. நூலில் வர்ணமேற்றத் தெரியாக் காரணத்தால் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை இழந்துவிடுகின்றனர். அக்குறைப் பாட்டை நீக்கும் நோக்கத்தோடு, வர்ணத் தொழிலில்பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவரான ஸ்ரீ M. S. மணி ராவ் தன் அனுபவமுறைகளை இப்பகுதியில் விவரிக்கிறார். ஆ—ர்.

M. S. மணி ராவ்

நூல் சலவை முறை

பத்து ராத்தல் கட்டுக்கு 2½ அவுன்ஸ் பிளீச்சிங் பவுடர், மராட்டிக் ஆசிட் 1—அவுன்ஸ் தண்ணீர், நூல் அமிழ்ந்து 1-கைப்பிடியளவு உயரம் இருக்கவேண்டும். முதலில் தண்ணீரில் பிளீச்சிங் பவுடரைக் கொட்டி நன்ருக கலக்கவும். பிறகு மராட்டிக் ஆசிடை ஊற்றி நன்ருக கலக்கிக் கொள்ளவும்.

நூல் கட்டைப் பிரித்து சுத்தமான ஜலத்தில் தோய்த்தெடுத்துப் பிழிந்து ரஸாயனம் கலந்துள்ள தண்ணீரில் 1-மணிநேரம்போட்டு வைத்து நன்ருய்ப் புரட்டி அலசியெடுத்து, அதை மறுபடியும் சுத்த ஜலத்தில் நனைத்துப் பிழிந்து பார்க்க தூய வெண்மை நிறமாகி விடும்.

டைரக்ட் கலர்

சலவை செய்த 10-ராத்தல் நூல் கட்டுக்கு 10-தோலா புளூவோ, பச்சையோ, சிகப்போ எந்தக்கலராய் இருந்தாலும் 'டைரக்ட் கலராக' சேர்க்க வேண்டும்.

கலர் சேர்க்கும் முறை:

முதலில் கலரை ஒரு சிறு கோப்பையில் தண்ணீர் விட்டு சந்தனம் போல் நன்ருய் குழைத்து வைத்துக் கொள்ள வேண்டும். குறைந்த அளவு 1½ பக்கெட் தண்ணீரை அடுப்பேற்றி கொதிக்கவைக்கவும். கொதிக்கும் தண்ணீரில் ¼ படி உப்பை அதில்போட்டுகரையவிடவும், உப்பு கரைந்தபின் சந்தனம்போல் குழைத்து வைத்துள்ள கலரை அதில் போட்டு கலக்கவும். அதன் பின் சலவை செய்து வைத்துள்ள நூலை சுத்த ஜலத்தில் நனைத்துப் பிழிந்து கொதித்துக்கொண்டிருக்கும் கலரை தண்ணீரில் போட்டு நன்ருய்ப் புரட்டவும். குறைந்தபட்சம் ½ மணிநேரம் அடுப்பிலிருக்கும் கொதிதண்ணீர் பாத்திரத்தை நூலோடு கீழிறக்கி 1-மணிநேரம் வைத்திருக்கவும். அதன் பின் நூலை தனியாய் எடுத்துப் பார்க்க தண்ணீரிலிருந்த கலர் முற்றும் நூலில் ஏறிவிட்டிருக்கும். தண்ணீர் கலரின்றி சுதாவாக இருக்கும். இவ்வாறு எடுக்கப்பட்ட நூலை பிழிந்து காயவைத்து உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். இது டைரக்ட் கலர் முறை.

பாஸ்ட் கலர்

10 ராத்தல் நூல்கட்டுக்கு 2½ தோலா பிருந்தால் (Brintal M. N.)

இதை ஒரு கோப்பையில் இட்டுதண்ணீர் சொற்ப அளவில்ஊற்றி சந்தனம் போல் குழைத்து தனியாய் வைத்துக்கொள்ளவும். ஓர் பாத்திரத்தில் நூலைப்போட்டு அது அமிழ்ந்து 1 கைப்பிடி உய

ரத்தில் நிற்குமாறுதண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும். அந்தத் தண்ணீரில்

(Manobol Soap) மனேபால் சோப் $2\frac{1}{2}$ அவுன்ஸ் போடவும், பிறகு (Caustic Soda) காஸ்டிக் சோடா $1\frac{3}{4}$ அவுன்ஸ் அதில் சேர்க்கவும். அதை ஓர் குச்சியினல் நன்ருய் கலக்கிவிட்டு அதில் பிரிந்தால் M. N. சேர்த்து கீழே இறக்கிவைத்து விடவும்.

ஓர் கோப்பையில் R. C. பேஸ் என்ற ரசாயனம் $2\frac{1}{2}$ தோலா விட்டு போதுமான



தண்ணீரினல் சந்தனம் போல் கலவையாக்கிக் கொள்ளவும்.

மேலே குறிப்பிட்ட அளவுப்படி தண்ணீரை ஓர் பாத்திரத்திலிட்டு அதில் (Sulphate of Ammonea) சல்பேட் ஆப் அமோனியா 3 தோலா போட்டு கரைத்துக்கொள்ளவும். இது குளிர்ந்த நீரிலேயே செய்ய வேண்டும்.

மாராட்டிக் ஆசிட் $2\frac{1}{2}$ தோலாவை அந்தக் குளிர்ந்த நீர்க்கலவையில் ஊற்றி கலக்கவும். ஸோடியம் ஆப் நைட்ரேட் என்ற ரசாயனத்தையும், அந்தக் கலவையில் சேர்த்து நன்ருய்க்கலக்கவும். பிறகு குழைத்து வைத்துள்ள R. C. பேசை ரசாயனம் கலந்த குளிர்ந்த நீரில் சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

சலவை முறையை ஆரம்பத்தில் விவரித்துள்ளோம். சலவை செய்துவைத்துள்ள நூலை தண்ணீரில் நனைத்து பிழிந்தெடுத்து முதலில் விவரித்துள்ள சுடு நீர் கலவையில் M. N. நன்ருய் தோய்த்துப் பிழிந்தால் நூல் தங்க நிறமாகக் காணப்படும் பிறகு, இரண்டாவதாய் விவரித்துள்ள (R. C. பேஸ்) கலவையில் நன்ருய் தோய்த்தெடுத்துப் பிழிந்து பார்க்க ரோஸ் நிறமாய்த்தோன்றும். கப்பு ரோஸாக நிறம் காணப்படவேண்டுமானல் மறுபடியும் (M. N.) கலவையில் போட்டெடுத்துப் பிழியவும். மறுபடியும் (R. C. பேஸ்) கலவையில் தோய்த்துப் பிழியவும். இவ்விதம் மூன்று முறை செய்யவும். கலவை தண்ணீர் உள்ள பாத்திரங்களில் நிறமிருக்காது. பச்சைத் தண்ணீராய் விடும். வண்ணன் வெளுத்தாலும் நிறம் குன்ருது. ஒவ்வொரு பாத்திரத்திலிருந்து நூலை எடுக்கும்போது கூடுமான வரை நூலில் தண்ணீர் கோர்த்திராதபடி முறுக்கேற்றிப் பிழியவும். அவ்வாறு செய்தால்தான் கலர் படிப்படியாய் நூலில் படிய ஏதுவாகும். ஈரத்தோடு மறு பாத்திரத்தில் போட்டால் கலர் மங்கலாகக் காணப்படும். ஆகையால், அந்தத் தண்ணீர் அந்தந்த பாத்திரத்திலேயே இருக்குமாறு பிழியவும்.

மற்ற கலர்கள்

தண்ணீர்,ரசாயனக்கலவையில் மாற்றம் செய்ய வேண்டியதில்லை. மேலே குறிப்பிட்டபடி கலந்து கொண்டு Brintal அல்லது நெப்தால் என்ற பெயர்களில் விற்கப்படும் வேறு கலர்களை வாங்கி கலந்து நூல்களில் தேவைப்படும் கலர்களை ஏற்றிக் கொள்ள வேண்டியது.

அடுத்து

நெப்தால் கலர்

பர்ஸ்ட்கலர் (போகாத கலர்)

இண்டாந்திரிகலர் (பாஸ்ட் கலரைச் சேர்ந்தது)

சர்பர் கலர்,

ஆசிட் கலர்,

ராப்பிட்கலர் (பூப்போடும் வகைகள்) ஒன்றன்பின் ஒன்ருக தொடர்ந்து வெளி வரும்.

—❀—

தென்னைக்குப் பதினறு கிளைகள்!

காவேரி நதிக்கரையில் கல்லணைக்குச் சமீபத்திலுள்ள கிளிக்கூடு என்ற சிற்றூரில் ஆறுமுக முத்துராஜா என்பவர் வசித்து வருகிருர். அவருக்குச் சொந்தமான நிலத்தில் தென்னை மரங்கள் பல உண்டு. ஆனல் ஒரு மரத்தில் மட்டும் பதினறு (16) கிளைகள் உள்ளன.ஒவ்வொரு கிளையிலும் தனித்தனியாக குலை யுண்டு; மட்டைகளும் உண்டு. கண்டு களிக்கத் தக்க காட்சி.

கல்லணைக்கும், கிளிக்கூட்டிற்கும் ஒரு பர்லாங் தூரம் கூட இருக்காது. கல்லணையிலே எவரைக் கேட்பினும் மரம் இருக்கும் இடத்தை இயம்புவர்.

—த. சிகாமணி.

P. M. Panjatchara Chetty,
P. Selvanatha Chetty & Co.,

JEWELLERS,

221, D, Nethaji Subhas Chandra Bose Road,

MADRAS-1

★

எங்களிடம் உத்தரவாதமான பொன், வெள்ளி நகைகள்
ரெடிமேடாகவும், ஆர்டர்பேரிலும் கிடைக்கும்.
நவீனமோஸ்தரில் கல்பதித்தும், எனமல் செய்தும் தரப்படும்
உத்தரவாதமான நகைகளுக்கு எங்களை அணுகுங்கள்.

M. K A N N A N

Government Approved Fabricator and Contractor

(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.

★

PLEASE CONTACT US FOR COLLAPSIBLE GATES,
MAIN GATES, WINDOW GRILLS,
VENTILATORS AND ALL OTHER BUILDING MATERIALS

★

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas welding
Stainless Steel, Aluminium Gas cutting works are also undertaken.

Our motto is to satisfy our customers

அகவிலை கொடுமைக்குக் காரணம் என்ன ?

—[கே. ஜி. ராஜா]—

நமது நாட்டில் அகவிலைக் கொடுமை அதிகரித்துள்ளதற்குக் காரணம் ஏற்றுமதி, இறக்குமதியில் ஏற்பட்டுள்ள பற்றாக் குறையே! ஏற்றுமதி கணிசமான முறையிலிருந்தால் தானே, இறக்குமதியைப் பெருக்கக்கூடும்? எனவே, அரசாங்கம் ஏற்றுமதியை அதிகமாக்குவதில் உடனடியாய் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். இறக்குமதி போதுமானவரை இல்லாமல் கட்டுப் படுத்தப் பட்டிருப்பதால் தான் நம் நாட்டு விளைவுப் பொருள்கள் கூட விலையேற்றம் அடையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. கட்டுப்படுத்தப் பட்டுள்ள அளவுப்படி அந்நிய நாட்டுப் பொருள்கள் இறக்குமதியாகுங் காரணத்தால் பதுக்கல், கடத்தல் அகவிலைக்கு விற்றல்போன்ற சமூக விரோதச் செயல்கள் பரவுகின்றன. இவற்றால் வர்த்தகத் துறையில் குழப்பமும்; உற்பத்தித் தொழிலில் மந்தமும், பொது மக்கள் வாழ்க்கையில் நெருக்கடியும் ஏற்படுகின்றன.

இறக்குமதியைப் பொறுத்த வரையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் பெரும் பகுதி தொழில்களுக்குத் தேவையான கச்சா பொருள்களுக்கும், இயந்திர உறுப்புக்களுக்குமாய்ச் செலவிடப் படுகிறது. இதை விசால நோக்கில் வரவேற்றேயாக வேண்டும். இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் பெரும் பெரும் தொழிற்சாலைகளை நடத்தியும், பெரிய பெரிய இயந்திரசாலைகளை நிறுவியும் நாட்டை வருங்கால முன்னேற்ற வழிக்குத் திருப்பியாக வேண்டியது அவசியந்தான். அதே சந்தர்ப்பத்தில் சிறு தொழில்கள் வளர்ச்சிக்கான உதவித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியதும் அவசியமேயன்றோ! நாளைகிடைக்குமென்று எதிர்பார்க்கும் பெரும்பலனை முன்னிட்டு இன்றைய வாழ்க்கைத் தரத்தை பாழாக்கிக் கொள்ள எவனும் துணியான். அது அசாதாரணமும் ஆகும். எனவே சிறு தொழில்கள் பாதகமடையாதவாறு தேவைப்படும் கச்சா பொருள்களை கணிசமாய் தருவிப்பதில் அரசாங்கம் அசிரத்தைக் காட்டுதல் கூடவே கூடாது.

நம் நாடு விவசாயத்தை அடிப்படை யாய்க் கொண்டது. விவசாயத்துக்குத் தேவையான கருவிகள் பெரும்பாலும் இரும்பாலானவையாய் இருப்பது கவனிக்கத்தக்கது. தற்போதைய இறக்குமதி வெட்டால் இரும்பு எஃகு இவற்றால் தயாரிக்கப்பட வேண்டிய கருவிகள் கிடைப்பது அரிதாவதோடு, விலையும் திடுக்கிடத்தக்க அளவுக்கு உயர்ந்தும் விட்டிருக்கிறது. இதே நிலை நீடித்தால் விவசாயத் தொழில் படுமோச வீழ்ச்சியை யடையவே செய்யும் என்பது மிகையல்ல.

இரண்டாவதாய் காகிதக் கட்டுப்பாட்டைக் குறிப்பிட வேண்டும். இந்த நாகரிக காலத்தில் கலை, பண்பாடு இவற்றை சாசனமாக்கிக் காட்டும் காகிதம் தாராளமாய்க் கிடைக்கவில்லையென்பது அவல நிலையேயன்றி வேறல்ல. பல்லூழிகாலமாய் காகிதத்தட்டு எற்பட்டதாய் சொல்வதற்கில்லை. ஆனால் இன்று அந்நிலையைப் பிரத்தியட்சமாய்க்காண்கிறோம். அன்றாடம் வெளிவரும் பத்திரிகைகளிலிருந்து மாதச் சஞ்சிகைகள் வரை பிரசுரமாவது பகீரத பிரயத்தனமாய் விட்டிருக்கிறது. பணத்தை ஒன்றுக்குப் பத்தாகக் கொடுத்தாலும் காகிதம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இக்காரணத்தால் கலைப்பொக்கிஷங்களான புத்தகங்களை வெளியிட்டு வந்த பதிப்பகங்கள் பல முடங்கிக் கிடக்கின்றன. இது சரித்திரங் கண்டிராத விபரீதம்.

மற்றும் பிலிம்வெட்டு சம்பந்தமாய் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் கிளர்ச்சி உச்ச நிலையடைந்திருக்கிறது பெரும் அளவில் இலாபத்தைத் தரும் இந்தத் தொழில் வளர்ச்சியிலும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது வருந்தத் தக்கதேயாகும். பரம ஏழைகளாயிருந்த நடிகர்களை பெரும் பிரபுக்களாய் மாற்றிய அற்புதத் தொழில் அது. டெக்னீஷியன்கள், இதர, சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப சேவையாளர்க்கெல்லாம் நல்ல ஊதியத்தைத் தருவதோடு, அரசாங்கத்திற்கும் வருமானமளிக்கும் அந்தத் தொழில் முடங்கிக் கிடக்க விடுவது சரியல்லவே! எனவே; இறக்குமதிவெட்டில் பிலிமைப் பொறுத்த

(தொடர்ச்சி ௨௨-ம் பக்கம் பார்க்க)

தியாக உள்ளம்

மா. முருகேசன்

உள்ளன்போடு பழகும் நண்பனை இக்காலத்தில் காண்பது அரிது. நண்பன் வாழ்வுக்காக தனக்குக் கிடைத்த உத்தியோகத்தை துறக்கிறான் நலங்கிள்ளி. அது மாத்திரமா? முன் பணமாய்க் கட்டி உத்தியோகத்தையடைய ரூ 500—ம் அனுப்பிவிட்டு மலேயா போய் விடுகிறான். இவைகளையெல்லாம் மிஞ்சக் கூடிய காரியமொன்றையும் செய்து தன் தியாக உள்ளத்தை உலகோர் அறிய திறந்து காட்டுகிறான். அது என்னவென்பதை சுவைமிக்க கதை விளக்குகிறது. ஆ—ர்.

கார்காலத்து மின்னலைப் போல் எதிர் வீட்டு ஜன்னல் வழியே பளிச்சிட்டு மறைந்துவிட்ட அந்த எழில் உருவத்தை என்னால் மறக்கவே முடியவில்லை. அது எப்படி முடியும்? என் வாழ்நாளிலே அதுதான் முதல் அனுபவம், அதிலும் புதிய அனுபவம். இதற்குமுன் நான் மங்கையர் பலரைப் பார்த்தும் பழகியுமிருக்கிறேன். அப்போதெல்லாம் இம்மாதிரி உணர்ச்சி எனக்கு ஏற்பட்டதில்லை.

ஓர்நாள் அலுவலகம் செல்ல என்னைச் சீர்படுத்திக் கொண்டு வெளித்தாழ்வாரத்திற்கு வந்த நான் அம்மின்னொளியானவளை எதிர்பாராத விதமாய் அதே ஜன்னல் வழியாய் காணும்படி நேர்ந்தது. ஒத்த வதனம், அதில் துள்ளித்திரியும் இரு கயல் விழிகள், கொவ்வைச் செவ்விதழ்கள், கறுத்தடர்ந்த குழற்கற்றை. இவ்வெழிலுடன் கூடிய அம்மின்னொளியாளுக்குப் பெயர் அம்பிகை என்பதை பல நாட்களுக்குப் பிறகுதான் அறிந்தேன்.

அவளுடன் எப்படியும் பேச வேண்டும். பேசி நம் உள்ளத்தைப் பிளந்து அவள் உருவை அதில் காட்ட வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் நான் எதிர்நோக்கிய தனிமை மட்டும் கிட்டவில்லை. இதோ அதோ என்று போக்குக் காட்டியது காலம். அதிலும் அவள் தாயில்லாப் பெண்' என்ற காரணத்தினால் ஈ எறும்பு தீண்டாமல் செல்வமாக வளர்த்து வந்தார். அம்மையப்பர்—அவள் தந்தை.

புதுமைப்பொலிவுடன் கட்டப்பட்டிருந்த அம்மையப்பரின் வீட்டைச் சுற்றி அழகானதொரு மலர்ப்பொழில். அத்தோட்டத்திலிருந்தே மாடிக்குச்செல்ல வழி. அம்மாடிப் படிக்கட்டில் தினம் நூறு முறையாவது ஏறி இறங்குவாள். அதுவும் எனக்கு விடுமுறை நாட்கள் என்றால் எண்ணிக்கை இருமடங்காகும். தோட்டத்திற்கு ஒரு நாளைக்கு நான்கு ஐந்து முறை **வந்து** நீர் ஊற்றுவாள்.

இத்தனையும் எனக்காகத்தான் என்பதை விரைவில் உணர்ந்து கொள்ளும்படி ஒரு வாய்ப்பு நேர்ந்தது. அன்று எனக்கு விடுமுறை நாள். அவளுக்காகவே நான் மாடி கைபிடிச்சுவரின் மீது அமர்ந்திருந்தேன். இடுப்பிலே நீர்க்குடம்தாங்கி வந்துவிட்டாள். அவள் மலருக்கு மலர் தாவி மது வருந்தும் வண்ணத்துப் பூச்சி போல் ஓடித் திரிந்தாள். அவள் வீசிய கண் வீச்சுக்கள் ஒவ்வொன்றும் என்உடலைத்தாக்கி சிலிர்க்க வைத்தது. அருகே இருந்த மலர்ச் செடியின் கொத்து மலரைப் பற்றி இழுத்தாள். அதைத் தன் மார்புறத் தழுவிக் கொண்டே என்னைப் பார்த்தாள்.

பார்த்தவள் ஏன் அம்மலர்க் கொத்துக்கு முத்தம் கொடுத்தாள்? முத்தம் கொடுத்தவள் ஏன் மீண்டும் என்னைப்பார்த்தாள்? எதற்காகத்தன் அரும்பு மலர் பல்வரிசை தெரிய சிரிக்கவேண்டும்? அவள் என்னைக் காதலிக்கின்றாள் என்பதைத்

(21-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையில் ஓரளவு தளர்த்தும் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமே!

பொதுவாக உள்நாட்டு உற்பத்திப் பெருக்கத்திற்கானவற்றை உடனடியாய்ச் செய்வதோடு பெறுமானத்தையும் உயர்த்த வேண்டும். ஏற்றுமதியை கணிசமாய் உயர்த்துவதோடு, இறக்குமதியிலும் தாராளத் தன்மையைக் கடைப்பிடித்தால்தான் நாட்டின், இன்றைய நெருக்கடியை சமாளிக்க முடியும்.

தவிர வேறு ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. அவள் நடந்துகொள்ளும் விதம், அசைந்து செல்லும் முறை, ஏன்? அவள் அங்க அடைவுகள் ஒவ்வொன்றும் அதைத்தான் கூறின.

ஒருநாள் மாலை நான் சோர்ந்தஉள்ளத்தோடு கடற்கரையை அடைந்தேன். அமைதியான இடம் நாடிச் சென்று அமர்ந்து கொண்டேன். அங்கு இருந்த அமைதியும், குளிர்ந்த உப்பங் காற்றும் என் உள்ளச் சோர்வை நீக்கி உற்சாக மளித்தது. கவலைகள் எல்லாம் ஒழிந்து ஆனந்தமாக இருக்கும் ஒரு நல்ல நேரத்தில் நண்பன் நலங்கிள்ளியின் நினைவு வந்தது.

என் உடன் படித்த உற்ற தோழன் அவன். என்நல் வாழ்வுக்காக தன் வாழ்வையும் கெடுத்துக்கொண்ட உத்தமன் அவன். நானும், நலங்கிள்ளியும் பல்கலைப் பட்டம் பெற்றுக்கொண்டு வேலை தேடப்புறப்பட்டோம், சோதனை குறிக்கிட்டது.

ஒருபெரிய அலுவலகத்தில் 150 ரூபாய் சம்பளத்தில் பொருள் காப்பாளனாக வேலை செய்ய ஆள் தேவை என்று அறிந்தோம். இருவரும் விண்ணப்பித்துக் கொண்டோம். எங்களையன்றி வேறு பலரும் அதே வேலைக்கு விண்ணப்பம் செய்திருந்தனர்.

அங்கு நடந்த தேர்வில் நான் இரண்டாவதாகவும், நலங்கிள்ளி முதலாவதாகவும் தேறினோம். ஆகவே முதல்வனாக வந்த என் நண்பனையே அவர்கள் வேலைக்கு அமர்த்தத் தீர்மானித்தனர். தோல்வியுற்ற என் உள்ளத்தில் சற்றே பொறாமை உருவாகத் தொடங்கியது. என்னசெய்வது, நம்திறமை அவ்வளவுதான் என்று என் மனதைச் சமாதானம்செய்து கொண்டேன்.

கலங்கிய மனத்தை இயற்கை நிலைக்குக் கொண்டுவர முயற்சி செய்து கொண்டிருந்த சமயம், ஒரு பெரும் அதிர்ச்சி நேர்ந்துவிட்டது. நான் மனுச்செய்திருந்த அலுவலகத்திலிருந்து கடிதம் ஒன்றும், வேறு ஒருகடிதமும் வந்தன. முதல் கடிதத்தைக் கண்டேன். வேலைக்கு என்னை அமர்த்தியிருப்பதாக ஒரு அறிவிப்பு. முன் பணம் 500 ரூ கட்ட வேண்டும் என்றுஅதில் கண்டிருந்தது.

அடுத்த கடிதம் நண்பன் நலங்கிள்ளியினுடையது. ''நண்ப—நீ இக் கடிதம் பார்க்கும் சமயம் நான் கப்பலில் மலயா சென்றுகொண்டிருப்பேன். உன்னிடம் கூறிக் கொள்ளாமல் செல்லுகின்றோமே என்ற கவலை தான் இருப்பினும், உன்மன நிலையை ஊகித்தறிந்த நான் செய்யக் கூடியது இதைத் தவிர வேறில்லை. எனக்கு வேலை கிடைத்தது பற்றி மகிழ்ச்சியடையாது, நீ, மனத்தளர்ச்சியடைந்தது தவறு தான்; என்றாலும், அதற்குக் காரணம் உன் வறுமை என்பதை நான் அறிவேன்.

''என் மாமா மலேயாவில் உள்ளதை நீயறிவாய். அங்கு சென்று வணிகத் துறையில் பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஆகவே, நான் வேலையில் அமரச்சந்தர்ப்பம் இல்லையென்பதை அறிவித்து, அவ்வேலையை இரண்டாவதாகத் தேறிய உனக்கு அளிக்கும்படியும், அந்த அலுவலக அதிகாரிக்குக் கடிதம் எழுதிவிட்டேன். முன் பணம் கட்ட ரூ 500 இத்துடன் அனுப்பியுள்ளேன். செலுத்தி வேலையை ஏற்றுக் கொள்ளவும் — நலங்கிள்ளி'' கையிலிருந்த கடிதம் என்னைச்சுட்டது. தியாகமே உருவான இந்நண்பன் மீது பொறாமை கொண்டோமே நாம் என்ற எண்ணம் என்னைப் பொசுக்கியது.

என் நண்பனின் தியாகத்தால் பெற்ற வேலையை ஏற்று இன்று ஆண்டுகள் பல ஆயின. ஆனால் அவனைப் பற்றிய செய்தியொன்றும் எனக்குக் கிட்டவில்லை. அவனும் எனக்கு ஒரு கடிதமும் எழுதவில்லை. ஒரு வேளை என்னை வெறுத்துவிட்டிருக்கவேண்டும்; எனறு பலவாறு எண்ணிக்கொண்டிருந்தேன்.

எதனாலோ என் எண்ணங்கள் திடீரென்று தடைப்படவே, சிந்தனையின் பிடியிலிருந்து என்னை விடுவித்துக்—

2/21, Pilliar Koil Street,
MADRAS-3.

கொண்டேன். கதிரவன் அடிவானத்தின் கீழ் விழ ஆரம்பித்திருந்தான். அந்தி வானத்தின் செம்மை, வானம் முழுதும் படர ஆரம்பித்தது. அவ்விடத்தை விட்டு, எழுந்து நடக்க ஆரம்பித்தேன்.

வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த என் எதிரில் வந்துகொண்டிருந்த மூன்று பேரைக் கண்டவுடன் நான் நிலை தடுமாறி விட்டேன்.

நலங்கிள்ளி, அம்பிகை, அவள் தந்தை மூவரும் என்னை நோக்கிவந்துகொண்டிருந்தனர். நண்பனைக்காண என் மனம் கூசியது. முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டேன். ஆனால் அருகில் வந்த அவன் என்னை அணைத்துப் பிடித்துக் கொண்டான். என் கண்களிலே நீர் கசியத்தொடங்கியது அதைத்துடைத்து விட்டான் நலங்கிள்ளி. அவன் கண்களில் துளிர்த்த நீரைக் கசிய விடாமல் காத்துக் கொண்டான்.

என் தவறுக்கு வருந்தி மன்னிப்புக் கோரினேன் அவனிடம். சினந்துகொண்டான் மன்னிப்புக் கேட்டதற்கு. பிறகு அருகில் நின்றுகொண்டிருந்த அம்மையப்பர் தான் சிங்கப்பூரிலிருந்த தன் மாமாவென்றும், அவர் உதவியால் தான் பெரிய வணிகனானதாகவும் கூறினான். என்னை அவருக்கும் அம்பிகைக்கும் அறிமுகப்படுத்தி வைத்தான். அம்பிகை உதட்டில் முறுவல் நெளியத் தலை கவிழ்ந்தாள்.

* * *

அருமையாகச் சமைத்த உணவைஅவள்—ஆம், அம்பிகையே தன் கையால் படைத்தாள். அமுதத்தின் இனிமை அச்சோற்றுக்கு எப்படி வந்தது? அவள்கை பட்டதால்தான் இருக்க வேண்டும். உணவைச் சுவைத்து உண்ண முடியவில்லை. நாட்டமெல்லாம் அவள் எழிலைப் பருகும் போது எப்படி நினைவு உணவில் செல்ல முடியும்? என் இலையருகே அவள் வரும் போதெல்லாம் ஏனோ உடம்பில் ஒரு நடுக்கம்; பேச்செல்லாம் குளறியது.

எல்லோரும் மௌனமாகவே உண்டு கொண்டிருந்

M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ்

(ஞானம்பிகா பிராண்டு)

ஸ்டீல் டிரங்க்கு வியாபாரம்
மூர்மார்கெட், சென்னை-3.

(அரசாங்க அங்கீகாரம் பெற்ற பேப்ரி கேட்டர்கள்)

எங்களிடம் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயார் செய்த நல்ல ஸ்டீல் சூட்கேஸ், கேபின், பிலிம் பாக்ஸ், இன்னும் இதர டிசைன்கள் ஆர்டரின் பேரில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

ஞானம்பிகா பிராண்டு ஸ்டீல் டிரங்க்கு பெட்டிகளை உபயோகியுங்கள்.



பேக்டரி : நெ. 52, சைடன்ஹாம்ஸ் ரோடு, சென்னை-3
ஷாப் : நெ. 15-A பிளாக்கு மூர்மார்கெட், சென்னை-3.

இங்ஙனம்.
M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ் (பார்ட்னர்ஸ்)
M. கோவிந்தசாமி
M. ராதாகிருஷ்ணன்

தோம். அந்த மௌனத்தைக் கலைத்தார் அம்மையப்பர்.

''மாப்பிள்ளே! கல்யாண காரியமா என்ன நினைச்சிருக்கே? அம்பிகைக்கும் வய சாகுது'' என்று மெதுவாக இழுத்தார்.

''நான் முதலிலே மதுரைக்குப் போயிட்டு வாரேன். வியாபாரகாரியம் முடிஞ்சு துண்ணு கல்யாணமும் முடிய வேண்டியதுதான். நான் ஆரம்பிக்கிற கிளைக் காரியாலயம்பற்றி உடனே மதுரை போய் வந்தப்பிறகு சொல்றேன்'' என்று கூறிவிட்டு இலையை விட்டு எழுந்தான். நலங்கிள்ளி.

கையைக் கழுவிக்கொண்டு மேல் துவாலையில் ஈரத்தைத் துடைத்துக்கொண்டே ''ஆமாமா! அதுவுஞ் சரிதான். எதுக்குச் சொல்லவரேன்னு, அதது முடியவேண்டிய காலத்திலே முடிஞ்சாதான் நல்லது, பாரு? அதுக்குச் சொன்னேன். சரி வெத்திலே போட்டுக்க தம்பி'' என்று என்னையும் தம் பேச்சின் இடையே இழுத்துக் கொண்டார் அம்மையப்பர்.

நண்பன் நலங்கிள்ளி மதுரை சென்றுவிட்டான்.

அவன் சென்ற மூன்றும் நாள் மாலை அலுவலகத்திலிருந்து திரும்பிய எனக்கு ஒருகடிதம் காத்திருந்தது. அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பிக்குமுன் அம்மையப்பர் என் அறையினுள் நுழைந்தார். அவர் கையிலும் ஒரு கடிதம் காணப்பட்டது. மௌனமாக அதை என் கையில் கொடுத்தார். ''மாமா—திருமணம் பற்றி அன்று கேட்டீர்கள். ஆம், உண்மையில் அம்பிகைக்கு வயதுவந்துவிட்டது. அவள் மனைவியாக வேண்டும், ஆனாலும் எனக்கல்ல. என் நண்பன் பாலுவுக்கு. அம்பிகையை மணந்துகொள்ள வேண்டும் என்று நான் என்றே முடிவு செய்திருந்தேன். ஆனால் அதை நான் கண்டிப்பாக மாற்றிக்கொள்ள வேண்டும். காரணம் நண்பன் பாலுவும் அம்பிகையும் ஒருவரையொருவர் விரும்புவதுதான். அவர்கள் உள்ளத்தைத் துண்டித்து அம்பிகையை அடைய நான் விரும்பவில்லை. திருமணத்திற்கு நாள் குறிக்கவும், என் அலுவல் முடிந்தவுடன் நான் வருகின்றேன்—நலங்கிள்ளி.

சிறிது நேரம் அயர்ந்து நின்றுவிட்டேன். பிறகு சுய நினைவு பெற்று எனக்கு வந்த கடிதத்தைப் படித்தேன். ''நண்ப, காதல் முறையற்றது. அதைக் கட்டுக்காவலில் வைக்க முடியாது. என் முறைப்பெண் அம்பிகை என்பதை அறியாமலே நீ கொண்டுவிட்ட காதலை நான் முழுமனதுடன் வரவேற்கின்றேன். நீயும் அம்பிகையும் நீண்ட நாளைய காதலர்கள் என்பதை, அன்று உன் அறைக்கு வந்தபோது அறிந்தேன். தற்செயலாக சில புத்தகங்களைப் புரட்டியபோது, பக்கத்திற்குப் பக்கம் அம்பிகையின் பெயர் எழுதியிருக்கக் கண்டேன். மகிழ்ச்சி கொண்டேன். அம்பிகையும் உன்னைக் காதலிக்கின்றாள் என்பதை நான் ஊகித்து அறிந்துகொண்டேன். இனியும் நான் உங்களிடையேபிளவை உண்டாக்கினால் - பிரிவை ஏற்படுத்தினால் எனக்கு மட்டுமல்ல; தமிழர் பண்பாட்டுக்கே இழுக்கு. திருமணத்திற்கு நிச்சயம் வருவேன்—நலங்கிள்ளி.''

கையிலிருந்த கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. கண்களிலிருந்து கண்ணீர் பெருகிவழிந்தோடியது. நலங்கிள்ளி ஓர் உத்தமன். அவனுடைய தியாக உள்ளத்தை அன்றுதான் உணர்ந்தேன். தியாகத்தின் எல்லையை அன்றுதான் கண்டேன்.

தான் பெறவேண்டிய வேலையை எனக்களித்தான் அன்று. இன்று, என் காதலுக்காக தன் வாழ்வையே தியாகம் செய்த அவனை என் நண்பனென்று கூறுவதைவிட வாழ்வளித்த தெய்வமென்று தான் கூற வேண்டும்.

அவன் அன்பை நினைத்து அவன் செய்த மகத்தான தியாகத்தை நினைத்துத் தேம்பி அழுத என்னை அம்மையப்பர் தேற்றி ஆறுதல் கூறினார். வேறு அவரால் என்ன செய்ய முடியும்?

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor.

(Regd. No.5.)

A.C.C. CEMENT STOCKIST

2, Sankari Road, Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப் பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான வேலைத்துவேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

முயற்சியால் முன்னுக்கு வந்தவர்

முயற்சியால் முன்னுக்கு வந்த பலரின் சரித்திரங்களைப் படித்திருக்கிறோம். இளமை முதல் தன்கையே தனக்குதவி என்ற கொள்கையைக் கடைப்பிடித்து உலக சமுதாயத்தில் புதுவித தொழில் புரட்சியைப் புகுத்தி வெற்றிகண்ட வீரர் ராபர்ட் ஓவனைப் பற்றி ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமே!

நூறு வருடங்களுக்கு முன் பிறந்து வாழ்ந்த ராபர்ட் ஓவன் தமது 87-ம் வயதில் காலமானார். உலகம் வியந்து பாராட்டும் உன்னத புருஷனாக விளங்கியதற்குக் காரணம் அவரின் இருபது வருட இடைவிடாத உழைப்பே. அவர் தனது நாற்பதாம் வயது வரை வியாபார துறையில் வெற்றிகண்டவராய் மாத்திரமே விளங்கினார். வேல்ஸில் பிறந்த அவர் தன் பத்தாம் வயதில் அதிர்ஷ்டத்தை நாடி லண்டனுக்கு வந்து சேர்ந்தார். பதினெட்டாம் வயதில் பஞ்சு ஆலைகளுக்கான இயந்திரப்பகுதிகளைத் தயாரிக்கும் கம்பெனியொன்றின் கூட்டாளியாய்ச் சேர்ந்தார். பதினொரு வருடங்களுக்குப் பின் அவர் ஸ்காட்லாண்டிலுள்ள நியூலானர்க்கில் மில்களின் முதலாளியானார்.

ஓர் புதுவித சமுதாயத்தையும், புதுவித இயந்திரசாலைகளையும் நிறுவவேண்டுமென்பது அவர் அவா. பதினைந்து வருடங்களில் அவர் அவா பூர்த்தியானது. தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு, வேலைக்குத் தகுந்தவாறு நிறைந்த கூலி தந்தார். தொழிலாளர்களுக்குத் தகுதியான வீடுகளும், நியாய விலை கடைகளும் நிர்மாணித்தார். நல்ல சாலைகள் போட்டார். விளையாட்டு மைதானங்கள் நிறுவினார். சிறுவர் கல்விக்கான பள்ளிக்கூடங்களைக் கட்டினார்.

ராபர்ட் ஓவன்

கிளைடே நதிக்கரையில் அமைந்துள்ள இந்த அற்புத ஸ்தாபனத்தைப் பார்க்க உலகின் பல பாகங்களிலிருந்தும் பார்வையாளர் வந்து கண்டு களித்தனர். ஆரம்பத்தில் பரிகாசமாய்நினைத்தவர்கள் இன்று தொழிலாளர்கள் அடையும் நற்பலன்களைக்கண்டு ஓவனின் சாதனையை வியக்காதிருப்பதற்கில்லை.

நியூலானர்க்கிலுள்ள தொழிற்சாலை, கிராமப்பகுதி இவற்றில் ஓவனின் கல்வித் திட்டம், தொழிற்சாலை சீர்திருத்தம், சிறு சமூகத்தினர் அமைப்பு இவைகளெல்லாம் பிரதிபலிப்பதைக் கண்டு களிக்கலாம்.

அவர் பள்ளிக்கூடங்களில் பாட்டு, நடனம், தேகப்பயிற்சி இவைகளையெல்லாம் பன்னிரண்டு வயது வரையுள்ள சிறுவர்க்கு போதிக்கப்படுகின்றன. ஓவன் தன் வாழ்நாளில் கல்வியபிவிர்த்தியில் அதிக கவனம் செலுத்தினார். 1900-ம் ஆண்டு வரை பன்னிரண்டு வயது சிறுவர்க்கு முழுநேரக் கல்வி போதிக்கப்படாதிருந்தது.

சட்டவரம்பின்றி மற்றெல்லா விடங்களிலும் சிறுவர்களிடமிருந்து நாள் ஒன்றுக்கு 12, 14 மணி நேர வேலை வாங்கப்பட்டதாயினும், ஓவனின் மில்களில் 11 மணிக்குக் குறைந்த நேர வேலையே வாங்கப்பட்டது. 1819-ல் ஓவனின் தீவிர முயற்சியால் சிறுவரை பஞ்சு மில்களில் வேலைக்கமர்த்துவதைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நியூலானர்க்கின் புகழ் மேலோங்கியது. ஓவனின் கொள்கைகள் விரிவடைந்தன. 'தனிப்பட்டவருக்காக திட்டம் தேவையில்லை. ஸ்தாபனத்தின் மூலம் தனிப்பட்டவர் நன்மைகள் அமையக் காணலாம்' இதுதான் அவரின் சமூக நல திட்டம். நியூலானர்க்கு வெளிப்புறத்திலுள்ளோர்க்கு இது மாறுபட்டிருக்கவும் கூடும்.

நெப்போலியனின் பிரான்சு நாட்டுப் போரில் பிரிட்டன் முடிவான வெற்றியை 1815-ல் தான் அடைந்தது. அதன்பின் அரசியல் பிரச்னைகளில் ஈடுபட்டவர் ஓவன் தான். அவர் சிறுவர்வேலைத்

திட்டத்தைபற்றியும், யுத்த காலத்திற்குப் பின் நாட்டு மந்த நிலையை சமாளிக்கும் வழியை பற்றியும் அரசினர்க்கு ஆலோசனை கூறினர்.

ஓவன், முழுநேர வேலைக்கும், வேலையற்றோரின் பிற்கால நலனுக்கான கூட்டுறவு ஸ்தாபன அமைப்புக்குமாய் திட்டமொன்று அமைத்தார்.

இந்தத் திட்டத்தைப் பார்த்து அதிகாரிகள் கவைக்குதவாததென்று பரிகாசம் செய்தனர்.

ஓவன் ஐரோப்பாவுக்குச் சென்று ராஜதந்திரிகளிடம் தன் திட்டத்தை வெளியிட்டார். பலன் ஏற்படாமல் லண்டனுக்கு வெறுங்கையாய்த் திரும்பினர். ஆனல் அவர் சளைக்க வில்லை.

அதற்கிடையில் லானர்க் கோமகள் வேலையில்லா பிரச்னையை சமாளிக்கும் விரைத்தைக் கேட்க, ஓவன் தன் 'ஓவனிஸம்' தத்துவத்தை விளக்கமாய்த் தந்தார். இதனுல் கிராம சமுதாயத்தின் நன்மை வளர்ச்சியுற ஏதுவாகியது, ஐக்கியமாய் உழைத்தல், செலவிடுதல், பொருளாதாரம் இவையெல்லாம் சம அளவில் அமைந்திருந்தன. லானர்க்கோமகள் இந்த புரட்சிகரமான திட்டங்களை சட்டமாக்கினர். ஓவன் மீண்டும் தன் பயணத்தைத் துவக்கினர். இந்த சமயம் அவர் செல்வங்கொழிக்கும் மில் முதலாளியாய்ச் செல்லவில்லை. 1824-ல் சிக்கனக்காரர்களான மில் பங்காளிகள் அவரை விலக்கி விட்டனர்.

மெக்ஸிகோவிலும், ஐக்கிய அமெரிக்க நாட்டிலும் ஐந்து வருடங்கள் பிரயாணம் பண்ணியும் பலன் ஏற்படவில்லை. ஓவன் பிரிட்டனுக்குத் திரும்பி வந்து புது முயற்சியில் ஈடுபட்டார். சமூகத்தை மாற்றியமைமக்க ஆரம்பதசையிலுள்ள வர்த்தக சங்கங்களும், கூட்டுறவு ஸ்தாபனங்களும் அவருக்கு ஆயுதங்களாய் அமைந்தன.

ஓவனின் வர்த்தக சங்க திட்டங்கள் அதன் வளர்ச்சியை இருபது வருடங்களுக்குத் தடைப்படுத்தி விடுமென்று பலரும் பேசினர். ஆனல் பெரும்பாலான தொழிலாள வர்க்கத்தின் கவனத்தை பெரிதும் கவர்ந்து விட்டிருந்தன. ஓர் சமயம் வர்த்தக சங்கங்கள் தமது அங்கத்தினர் எண்ணிக்கையை கவனித்தில் ஸ்தாபனமொன்றில் 1,000,000 தொழிலாளரிருப்பதாய்த் தெரிய வந்தது.

இவ்வாறு சலியா உழைப்பால் அரியபெரிய சாதனைகளை நிலை நிறுத்திச் சென்ற ராபர்ட் ஓவனின் வாழ்க்கை வரலாறு முன்னேற்றத்தை விரும்புவோர்க்கு வழிகாட்டியாய் அமையும் என்பதில் ஐயமே இல்லை.—"கோமான்"

S. அப்துல் சுபஹான் சாயபு

இரும்பு வியாபாரம்

(அரசாங்க அங்கீகாரம் பெற்ற பேப்ரிகேட்டர்)

RGED. NO. 13

தெற்கு ராஜ விதி, : : புதுக்கோட்டை.

உயர்ந்தரக தண்ணீர் வைக்கும் குடங்கள், பட்டண வாளிகள், கடகால், இறைவை சால்கள், முட்டி சால்கள், ஏந்த சட்டிகள், பால் அடுப்புகள், ரம்ப தூள் அடுப்புகள், வடை சட்டிகள், தோசைக்கல், வண்டி பார் கம்பிகள், ஏர் கொழுவு, முத்திரையிட்ட பட்டணம் படி செட்டுகள், படிக்கல் செட்டுகள், மாட்டு சங்கிலிகள், நெல் அவிக்கும் அண்டாக்கள் இவைகள் யாவும் சிறந்த முறையில் உற்பத்தி செய்கிறோம். குறித்த நேரத்தில் ஆர்டர்களுக்கு சப்ளை செய்து தருகிறோம்.

உரிமையாளர் :

S. அப்துல் சுபஹான் சாயபு.

வண்ணையம்பதி சர். தியாகராயர் கல்லூரியில்

பாரதியார் - வ. உ. சி. நினைவு விழா

செந்தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் 18-11-58 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிக்கு உள்நாட்டு அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் B. A. B. L. அவர்கள் தலைமையில் விழா நடந்தது.

மாணவர் தேசிய ராணுவப்படை அணிவகுத்து அமைச்சருக்கு மரியாதை செலுத்தியது.

திருமதி V. பெருந்தேவி அவர்களால் இறை வணக்கம் நடந்து பள்ளித் தலைமை ஆசிரியர் திரு ஆ. நே. சர்ம்ராஜ் பி. ஏ. எல். டி. அவர்கள் அமைச்சர் முதலானவர்களை வரவேற்றார்.

அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் பேசியதாவது-

இத்தகைய விழாக்கள் மிக மிக இன்றியமையாதவை. பாரதியார், வ. உ.சி.போன்றவர்கள் ஆற்றிய அரும் பெருந் தொண்டுகளை நாம் என்றும் மறக்கக் கூடாது. அவர்களைப் போற்றுவதின் வாயிலாக நாம் அடையக் கூடிய நன்மைகள் பல.

ஒவ்வொருவருக்கும் அவசியமாகத் தேவைப்படும் பொருளை நெறிய் முறையில் உழைத்துப் பெற வேண்டும் பொருளை நல்ல முறையில் பயன்படுத்த அறிவு வேண்டும். அறிவு இல்லையானால் பொருளாற் பயனில்லை. இந்த இரண்டும் இருக்கின்ற நாடுகளில் கூட அமைதி இல்லை. அங்கும் கொலை, களவு, வஞ்சனை ஏமாற்றம் முதலிய கொடுஞ்செயல்கள் இருக்கின்றன. எனவே பொருள் அறிவு இவை இரண்டும் இருந்தால் மட்டும்போதாது. ஒவ்வொருவருக்கும் ஒழுக்கம் இன்றியமையாதது. ஒழுக்கந்தான் ஒருவனை உயர்ந்தவனாக்கும். இதை உணர்ந்தே, தாயுமானவர் 'கல்லாதவர்களே நல்லவர்கள்' என்று கூறினர். ஆகையால் பொருள், அறிவு, ஒழுக்கம் இவை மூன்றும் ஒன்று சேர்ந்தால் தான் நன்மை உண்டு, இதைத் தான் பாரதியார், வ. உ. சி. முதலிய பெரியோர்களிடம் காண்கின்றோம். எனவே அவர்கள் நின்று காட்டிய நெறியில் நீங்களும் நின்று நல்வாழ்வு பெறவேண்டும்" என்று கூறினர்.

பின்னர் அமைச்சர் அவர்கள் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினர். பாரதியார் பேச்சுப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாணவன் செல்வன் ஏ. வி. மணிவண்ணன் பயிலும் பள்ளியாகிய சிந்தாத்திரிப்பேட்டை உயர் நிலைப் பள்ளிக்கு அமைச்சர் அவர்கள் உலாவும் வெண்பொற்கிண்ணத்தை வழங்கினர்.

சிறந்த எழுத்தாளரும் பேச்சாளருமான திரு அகிலன் அவர்கள் பாரதியாரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து பாரதியாரைப்பற்றி இரண்டொரு அரிய கருத்துக்களைக் கூறி முடித்தார்.

பின்னர் "தொழில்" ஆசிரியர் திரு K. பெருமாள் உடையார் அவர்கள் வ.உ.சி அவர்களின் படத்தைத் திறந்து வைத்துஅன்னாரின் வாழ்க்கையில் நிகழ்ந்தஅரிய

உள் நாட்டு அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம், தலைமை ஆசிரியர் ஸ்ரீ சாம்ராஜ், "தொழில்" ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். ஸ்ரீ அகிலன் பேசுகிறார்

சம்பவங்களை உணர்ச்சியோடு விளக்கிக் கூறினார்.

வ. உ. சி. அவர்களின் புதல்வர் திரு சுப்பிரமணியம் அவர்கள் நன்றி தெரிவிக்கும் முறையில் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நல்லுரை வழங்கினார்கள்.

பின்னர் வித்துவான் திரு. சி. விசுவநாதன் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

வண்ணையம்பதி சர். தியாகராயர் உயர் நிலைப்பள்ளியில் தேசீய மேதைகளைப் பாராட்டி விழா நடத்திய ஆசிரியர்களை நாம் பாராட்டுகிறோம். இது போன்ற தேசிய விழாக்களை அடுத்தடுத்து நடத்தி தேசிய மணங்கமழச் செய்வதில் ஆசிரியர்கள் மேலும் ஊக்கங் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

—ஆ—ர்.

குலாலர் அபிவிர்த்தி சங்கம்

இராஜபாளையம் சஞ்சீவநாதபுரம் தெருவில் 14—9—58) ஞாயிறு காலை) திரு. காந்தி நாயுடு அவர்கள் தலைமையில் குலாலர் அபிவிருத்தி சங்கம்நிறுவப்பட்டு சிறப்புற நடந்து வருவதாக காரியதரிசி ஸ்ரீ M. S. நாகமுத்து அறிவிக்கிறார்.

P. ஹுசேன்ஷா & சன்ஸ்
(பூரண உரிமையாளர்).

P. H. முகமது நஸீ நத்தீன்

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்
G I பைப் & பைப்
பிட்டிங்ஸ் வியாபாரம்,
இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்.

பாலக்கரை ரோடு திருச்சி-8.
தபால் பெட்டி நெ. 456
போன் : 786
தந்தி : HARDWARE

Sree Jayalakshmi & Co.,
MAKERS OF CANE FURNITURE
114, ராயப்பேட்டை ஐரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.



எந்த விதமான உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பலநிற இனாமல் வர்ணங்களினால் அலங்கரித்து குறித்த நேரத்தில் டெலிவரிசெய்கிறோம். வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவறாமல் புக் செய்யப்படும். உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

உரிமையாளர்,
K. N. ராஜன்.

வளரும் படங்கள் :

நடிகர் பாலையாவின் உயிர் ஓவியம் "சுவீகாரம்"

பிரபல 'வில்லன்' நடிகரான ஸ்ரீ T. S. பாலையா படாதிபதியாயும், கதை வசன கர்த்தாவாயும் விளங்குகிறார் என்பதை அண்மையில் வெளிவரவிருக்கும் 'சுவீகார'த்தின் மூலம் அறியலாம். ஸ்ரீ பாலையாவின் உத்திரா பிலிம்ஸ் தயாரிப்பான சுவீகாரத்தை ஸ்ரீ V. S. நாராயணன் டைரக்ட் செய்கிறார்.

கோபி சகோதரர்களின் 'ஓடாதே நில்!' படத்தில் திறம்பட நடிக்கும் S. M. குமரேசன்.



அதட்டிப் பேசியும் அனுவசியப் பார்வையேனோ? உத்தரா பிலிம்ஸாரின் சுவீகாரத்தில் பாலையாவும், தங்கவேலும்.

இதில் சிவாஜி கணேசன், T. S. பாலையா, தங்கவேலு, குலதெய்வம் ராஜகோபால். ராஜசுலோசனா, P. கண்ணாம்பா, ஸ்ரீ ரஞ்சனி, லக்ஷ்மி பிரபா, சந்திரகாந்தா முதலியோர் நடிக்கின்றனர்.

கதை எழுதுகிறவர் ஒருவர், வசனம் தீட்டுகிறவர் வேறொருவர். இருவரும் முன் அனுபவமின்றி அதிர்ஷ்டத்தால் திடீர் என்று உந்தப்பட்டவர்களாய்த் தான் இருப்பார்கள், இது அனுபவ உண்மை.

சுவீகாரம் கதையை எழுதி வசனத்தைத் தீட்டி, தானும் நடித்து, படத்தையும் உருவாக்கித் தருகிற ஸ்ரீ T. S. பாலையா மேலே குறிப்பிட்டவர்களைப் போலல்ல. பால்ய நடிகனாய் நாடக அனுபவம் பெற்று, அனேக படங்களில் பற்பல உணர்ச்சிகளைக் கொண்ட குணச்சித்திரபாகங்களை யேற்று நடித்து, அனுபவம் பெற்ற மேதை—ஜாம்பவான்; அன்னாரின் சொந்த சிருஷ்டி எப்படியிருக்குமென்பதை நாம் விவரிக்கவும் வேண்டுமோ! ஆ—ர்.

கோபி சகோதரர்களின் 'ஓடாதே நில்!' படத்தில் தோன்றும் புதுமுகம் சாந்தினி

கருத்துரை :

மாங்கல்ய பாக்கியம்

தமிழ் படங்களில் புதுமையையே காணமுடியவில்லையே என்று ரசிகர்கள் அங்கலாய்த்துக்கொண்டிருக்கும் சமயம் கிருஷ்ணா பிக்சர்ஸார் ஏதாவது ஒரு புதுமையைக் கையாளலாம் என்று கருதினர் போலும். 'மாங்கல்ய பாக்கியம்' என்று பெண்களை நம்பி படத்துக்குப் பெயரைச் சூட்டி ''புதுமை'' என்ற ஒன்றை புகுத்த வேண்டும் என்பதற்காக ஒரே கதையை மூன்று பகுதியாகப் பிரித்து அதாவது சமூகம், 'போக்லர்' புராணம் என்ற முறையில் மாயம், மந்திரம், கடவுள் ஆகிய எல்லாவற்றையும் ஒரே படத்தில் புகுத்தி படத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

உண்மையில் 'மாங்கல்ய பாக்கியம்' மக்களின்பொழுது போக்குகாக எடுக்கப்பட்ட படமா, அல்லது கிருஷ்ணா பிக்சர்ஸார் பொழுதைப் போக்க இப்படிஒரு படத்தை தயாரிப்போம் என்று எடுக்கப்பட்ட படமா என்று நமக்குப் புரியவில்லை.

கலப்புக் கல்யாணத்தை வலியுறுத்தும் நோக்கம் கதையில் பல இடங்களில் மிதக்கின்றது. நல்ல கருத்தினை அடிப்படையாகக் கொண்ட போதிலும் கதை அமைப்பு வேண்டும் என்றே

பலகோணங்களுக்கு பலருடைய வேண்டுகோளுக்கு இல்லை—கட்டளைக்கு கட்டுப்பட்டு அய்யாப்பிள்ளை கதையை இழுத்துப்போய் அடிப்படைக் கருத்தையே சிதறடித்து விட்டார். கடமையை விட கட்டுப்பாடு பலவந்தப் படுத்தப் பட்டதாலோ என்னவோ வசனத்தில் கூட அய்யா பிள்ளையின் முத்திரையை நாம் காணமுடியவில்லை. நகைச்சுவை வசனங்கள் சிறப்பாக இருக்கின்றன. மாங்கல்ய பாக்கியத்தின் மகிமையை எடுத்துக்காட்டும் பெண்ணாக ராகினி வருகிறார். அவர் கதா நாயகியாய் நடிக்கும் முதல் படம் இது: பரவாயில்லை அவருடைய நடிப்பு. ராகினியின் கணவனாக வரும் பாலாஜியின் நடிப்பில் குறிப்பிட்டுக் சொல்ல ஒன்றுமில்லை என்றாலும் குறை காண முடியாது. அவருடைய தங்கையாக வரும் குசல குமாரிக்கே போதிய சந்தர்ப்பம் அளிக்காததினால் அவருடைய

பாவையின் கரம்பற்றி பயங்கரமாய் இழுப்பதேன்? ஸாயிபாபா பிலிம்ஸாரின் '' பாரசீகப் பைங்கிளி ''யில், பி. எஸ். சரோஜாவும், ஓ. ஏ. கே. தேவரும்.

திறமையைக் காண முடியவில்லை.

மந்திரவாதியாக வரும் ஓ. ஏ. கே. தேவரின் சீடனுகை தங்கவேலுதான் படம் பார்ப்பவர்களை தொடர்ந்து உட்கார்ந்து பார்க்கவைக்கிருர். மாறு வேடம் போட்டு வந்திருக்கும் சப் இன்ஸ்பெக்டர் பாலையாவுடன் அவர் பேசும்போது அழுமூஞ்சிக்குக்கூட சிரிப்பு வந்துவிடும்.

கதையைக் கண்ட படி திரித்து ஓட்டி இருப்பதை பெரும் குறையாக நாம் கருதாமல் இருக்க இடை இடையே சில அருமையான நடனங்களை புகுத்தி இருப்பது பாராட்ட வேண்டியதே. அவற்றில் குறிப்பிட்டுக் கூறவேண்டியது பத்மினியின் குறத்தி நடனமும், சாயி சுப்புலட்சுமியின் நாட்டியமும்.

பிரபல காமரா நிபுணர் ரெஹமானின் படப்பிடிப்பின் அருமையை ராகினி பாலாஜி கனவுக் காட்சியில் நாம் கண்டு ரஸிக்க முடிகிறது.

அந்தக் காட்சியில் இரட்டை வேடப்படப்பிடிப்பு மிகவும் அற்புதம்.

அன்பு பொங்கினுலும் அணைப்பது இப்படியா? ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸாரின் மாமியார் மெச்சிய மருமகளில் எம். என். ராஜமும், ராஜேந்திரனும்.

உடுமலை நாராயணகவி, கவிஞர் கண்ணதாசன், ராமையாதாஸ் முதலியோர் பாடல்கள் எழுதி, அவற்றிற்கு சங்கீத மேதை ராமநாதன் இசை அமைத்து கோவிந்தராசன் சுசிலா முதலியோர் பாடி இருந்தும் ஒரு பாட்டாவது மனத்தில் தங்கவில்லையே ஏன்?

பழம்பெரும் டைரக்டரான ரகுநாத் டைரக்ஷனில் குறிப்பிட்டுக் கூற முடியாதது குறித்து வருந்தத்தான் வேண்டி இருக்கிறது.

இருப்பினும் நல்ல நகைச்சுவையையும் கண்களுக்கு மட்டும் விருந்தளிக்கும் நடனங்களையும் புகுத்தி படத்தை 'போர்' அடிக்காமல் செய்திருக்கிருர். அதற்காக நமது பாராட்டு.

—சோக

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3

Asst. Editor: K. G. RAJU.

ALVITONE

(AN IDEAL FOOD BEVERAGE)

Doctors Agree is Good for You & Me.

Prepared under the most hygienic conditions ALVITONE is an ideal food beverage containing concentrates from Almond, Barleymalt, Full-cream Milk and Cocoa. Extra rich in vitamins and calcium, it is an ideal drinking food for invalids and Nursing mothers.

Get a tin today.

ALVITONE LABORATORIES, MADRAS-16

★

சுவை மிக்கது ! வலிமை தரக்கூடியது ! சோர்வு நீக்கி சுகம் தருகிறது !

ஆல்விடோன்

பாதாம் பருப்பு, பாலாடைக்கட்டி, பார்லிமால்ட், கோகோ முதலிய சிறந்த சத்துள்ள உணவுப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஆல்விடோன் ஓர் உயர்ந்த உணவு பானம்.

கால்ஸியத்துடன் உயிர்ச் சத்துக்கள் நிறைந்த ஆல்விடோன் உங்களுக்கு எப்பொழுதும் புத்துணர்ச்சியும் வலிமையும் ஊட்டுகிறது.

இந்தியாவின் திலகமாய் விளங்கும் தென்னகத்தின் ஓர் இணையற்ற தயாரிப்பு ஆல்விடோன்.

ஆனந்தமடைய ஆல்விடோன் அருந்துங்கள் !

ஆல்விடோன் தொழிற்சாலை

சென்னை-16

Regd. No. M. 7007 THOZIL 1—12—58

காங்கிரஸ் பொருட்காட்சி

1958-59

சித்திர கலைக்கூடம்

தற்போதைய இந்திய சைத்ரீகர்களின் வண்ண ஓவியங்கள்,
சித்திரங்கள் மற்றும் சிற்பங்களின் கண்காட்சி

★

பாலர் - கலைப்பகுதி ஒரு விசேஷ அம்சம்

பரிசுகளாக ரூ. 2600 வழங்கப்படும்

கண்காட்சிக்கான படங்கள் முதலியவைகளை 1958 டிஸம்பர் 8ஂ
முதல் 13ஂ வரை பிரதிதினமும் காலை 10 மணியிலிருந்து
மாலை 6 மணி வரை பொருட்காட்சி அலுவலகத்
தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

விபரங்களடங்கிய பிரசுரத்திற்கு விண்ணப்பிக்கவும் :

காரியதரிசி :

ஸ்ரீ C. R. ராமசாமி, எம். எல். ஏ., எம். ஸி.

காங்கிரஸ் மைதானம் - சென்னை-6.

ANANDA PARVATHI PRESS, MADRAS-3